

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 155 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 29 – ஞாயிற்றுக்கிழமை 14 ஜனவரி 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 155 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 29 - Sunday 14 January 2024 - Madurai 12 Pages ₹ 5.00


# இனிய பொங்கல் இந்தியப் பொங்கல் ஆகட்டும்!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் பொங்கல் – தமிழர் திருநாள் வாழ்த்து மடல்.**

உலகெங்கும் வாழும் தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாகப் பொங்கல் நன்னாள் கொண்டாடப்படுகிறது. இது உழைப்பின் மேன்மையைப் போற்றும் திருநாள். உழுது விளைவித்து அறுவடை செய்த நெல்லை அரிசியாக்கிப் பொங்கல் வைத்து, அந்த விளைச்சலுக்குக் காரணமான இயற்கை ஆற்றலாம் சூரியனுக்கும், உழவுக்குத் துணையாய் இருந்த கால்நடைகளுக்கும் நன்றி செலுத்துகிற நன்னாள்! சாதி-மத பேதமற்ற சமத்துவத் திருநாள்! ஆரியப் பண்பாட்டுத் தாக்கம் ஏதுமின்றி, திராவிடர்களாம் தமிழர்களின் தனிச் சிறப்புமிக்க தொன்மைமிகு பண்பாட்டின் கொண்டாட்டமாக அமைந்திருப்பது, தை முதல் நாளாம் பொங்கல் திருநாள்!

**“தை பிறந்தால் வழி பிறக்கும்” என்பது தமிழர்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையைத் தமிழ்நாட்டுத் தமிழர்கள் இழந்து விடாத வகையில், கடந்த 2023-ஆம் ஆண்டு இறுதியில் தமிழ்நாடு எதிர்கொண்ட மிக்ஜாம் மழை வெள்ள இயற்கைப் பேரிடர் பாதிப்பிலிருந்து மக்களைக் காப்பதிலும் மீட்டெடுப்பதிலும் நமது திராவிட மாடல் அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றியது.**

கடும் பேரிடர்களாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் புதுடெல்லியில், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் நானே நேரில் சென்று வலியுறுத்தியபோதும், அத்தகைய அறிவிப்போ, தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கான நிதியோ வரவில்லையென்றாலும், நம் மக்களைக் காக்க வேண்டிய கடமையை உணர்ந்து, மழை – வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 6000 ரூபாய் நிதி வழங்கியதுடன், வீடுகளை இழந்த குடும்பத்தினர், படகுகள் சேதமான மீனவர்கள், உயிரிழப்புகளை எதிர்கொண்டவர்களின் குடும்பத்தினர், பயிர்கள் பாதிக்கப்பட்ட உழவர்கள், தொழில் முடங்கிய வணிகர்கள் எனப் பல்வேறு தரப்பினருக்கான நிவாரணத் தொகையையும் உயர்த்தி அறிவித்து வழங்கி வருகிறது திராவிட மாடல் அரசு.

வணிகர்களுக்கான கடன் வழங்கும் முகாம்கள், முக்கியமான சான்றிதழ்களை இழந்தவர்களுக்கு மாற்றுச் சான்றிதழ்கள் வழங்கும் முகாம்கள், நோய்த்தொற்று ஏற்படாமல் இருப்பதற்கான மருத்துவ முகாம்கள் ஆகியவை தொடர்ந்து நடைபெற்றுள்ளன.

முதலமைச்சர் என்கிற பொறுப்பில் உள்ள உங்களில் ஒருவனான நான் இந்தப் பணிகளை மேற்கொண்ட வேளையில், என்னை முதலமைச்சராக்கிட அயராது உழைத்த அன்பு உடன்பிறப்புகளாம் தி.மு.கழகத்தின் நிர்வாகிகளும் தொண்டர்களும் அவரவர் பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி, அவர்களின் துயர் துடைக்கும் கைகளாகச் செயல்பட்டீர்கள். கழகத்தினரின் இத்தகைய செயல்வேகம் குறித்த செய்திகள்தான் என்னுடைய பணிக்கு ஊக்கம் தரக்கூடியவை; மக்களுக்கான பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள உத்வேகம் அளிப்பவை.

நம் உயிர்நிகர்த் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டு மக்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கிடும் நடைமுறையைக் கொண்டு வந்தார். அந்த எதிர்பார்ப்பு இன்றளவும் மக்களிடம் இருப்பதை உங்களில் ஒருவனான நான் அறிவேன். அதனால்தான் ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முழுக் கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும் என்று திராவிட மாடல் அரசு அறிவித்தது. அத்துடன், ரொக்கத் தொகையும் வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் இருந்ததை நான் அறிந்தேன்.

**கடுமையான நிதி நெருக்கடி நிலவிய சூழலிலும் ரொக்கப் பணம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையைப் புறந்தள்ளாமல் பரிசீலித்தேன். சர்க்கரை நாவில் இனிக்கும். ரொக்கப் பணம் மனதில் இனிக்கும் என்பதால் தமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளில் தமிழ்நாட்டுக் குடும்பங்களில் கூடுதல் மகிழ்ச்சி பொங்கிடும் வகையில் 2 கோடியே 19 இலட்சத்து 71 ஆயிரத்து 113 அரிசி அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ஆயிரம் ரூபாய் ரொக்கமாக வழங்கப்பட்டு வருகிறது.**

ரொக்கத்துடன் கூடிய இந்த பரிசுத் தொகுப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகை 2,436.19 கோடி ரூபாய் ஆகும். அத்துடன் 1 கோடியே 77 இலட்சம் சேலைகளும் வேட்டிகளும் ஏழை – எளிய மக்களுக்கு பொங்கல் பரிசாக நியாய விலைக் கடைகள் மூலம் இந்த ஆண்டுதான் பொங்கலுக்கு முன்பே வழங்கப்படுகின்றன. இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் குடும்பத் தலைவியருக்கு மாதந்தோறும் வழங்கப்படும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் ஆயிரம் ரூபாய், ஜனவரி 10-ஆம் தேதியே அவரவர் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டு, பொங்கலின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியுள்ளது நமது திராவிட மாடல் அரசு.

**எத்தனை நெருக்கடிகள் சூழ்ந்தாலும், நம் மீது நம்பிக்கை வைத்து ஆட்சியை ஒப்படைத்த தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்கும் அரசாக கழக அரசு தன் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.**

ஜனவரி 7, 8 தேதிகளில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக 6 இலட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி ரூபாய் முதலீட்டினைத் தமிழ்நாடு பெறக்கூடிய வாய்ப்பும், அதன் வாயிலாக 26 இலட்சத்து 90 ஆயிரத்து 657 பேருக்கு வேலை வாய்ப்பு அமையக்கூடிய சூழலும் உருவாகியுள்ளது. சென்னையில் மட்டுமின்றி தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் இந்த முதலீடுகள் மூலமாக தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் அமைக்கப்படவிருப்பதால் பரந்துபட்ட வளர்ச்சியை நோக்கிய பாய்ச்சலைக் காணவிருக்கிறது நமது மாநிலம்.

பொருளாதாரப் பள்ளத்தாக்கில் விழுந்து கிடந்த தமிழ்நாட்டை இரண்டரை ஆண்டுகளில் மிகுந்த பாடுபட்டுச் சமதளத்திற்குக் கொண்டு வந்து, சிகரத்தை நோக்கிப் பயணிக்கச் செய்திருக்கிறது திராவிட மாடல் ஆட்சி. நமது அரசின் இந்த முயற்சிகளை சென்னையில் ஜனவரி 11, 12 தேதிகளில் நடைபெற்ற அயலகத் தமிழர் நாள் விழாவில் பங்கேற்ற உலகத் தமிழர்கள் பலரும் பாராட்டியதுடன், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நிற்கவும் உறுதியளித்துள்ளனர்.

நமது திராவிட மாடல் அரசின் திட்டங்கள் இன்று இந்தியாவுக்கான முன்னோடித் திட்டங்களாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. விடியல் பயணத் திட்டம், காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களை பிற மாநிலங்கள் பின்பற்றத் தொடங்கியிருப்பதைப் பார்க்கிறோம். மற்ற மாநிலங்களின் தேர்தல் களங்களில் திராவிட மாடல் அரசின் திட்டங்களே வாக்குறுதிகளாக அளிக்கப்படுகின்றன.

**‘எல்லாருக்கும் எல்லாம்’ என்பதே திராவிட மாடல் அரசின் அடிப்படைக் கோட்பாடு. ‘நான்தான் எல்லாம்’ என்கிற போக்கில் செயல்படுகிற ஆட்சியதிகாரம், ஜனநாயகத்திற்குச் சீர்கேடு. அத்தகைய சீர்கேட்டை அகற்றி, ஜனநாயகம் மலர்வதற்கு மாநிலங்களின் உரிமைகளை மதிக்கக்கூடிய கூட்டாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் செயல்படக்கூடிய ஒன்றிய அரசு 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின் அமைந்திட வேண்டும்.**

இந்தியாவின் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கக்கூடிய, மதநல்லிணக்கத்தைப் போற்றக்கூடிய, மதவெறிக்கு இடந்தராத, மொழி ஆதிக்கச் சிந்தனையில்லாத, மாநில உரிமைகளுக்கு மதிப்பளிக்கிற ஓர் அரசை அமைப்பதற்கான காலம் கனிந்து வந்துள்ளது. அதற்கான உற்சாகத்தைத் தரும் தொடக்க விழாவாக இந்தப் பொங்கல் திருநாள் அமைந்துள்ளது.

## உங்களில் ஒருவன்

தை பிறக்கிறது. இனி வரும் மாதங்களில் வழி பிறக்கட்டும். தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாகச் “சென்னை சங்கமம்” நிகழ்வில் கேட்கின்ற பறை முழக்கம், தமிழ்நாட்டிற்கான வெற்றி முழக்கமாக அமையட்டும்.

**ஜனவரி 21 அன்று சேலத்தில் நடைபெறுகிற இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு எழுப்புகின்ற ‘மாநில உரிமை மீட்பு முழக்கம்’ டெல்லி வரை அதிரட்டும். “நாற்பதும் நமதே!, நாடும் நமதே!” என்ற நம் இலக்கினை அடைவதற்கு உத்வேகமாகட்டும்.**

எழுச்சிமிகுந்த இளைஞரணி மாநாட்டிற்கான ஆயத்தப் பணிகள் நிறைவடைந்து, தமிழ்நாடு முழுவதும் இளைஞர்கள் பெரும் ஆர்வத்துடன் திரண்டு வரத் தயாராகியுள்ள நிலையில், வதந்திகளையே செய்திகளாகப் பரப்பி வாழ்க்கைப் பிழைப்பு நடத்தி வயிறு வளர்க்கக் கூடிய பிறவிகள், என் உடல்நிலை குறித்து பொய்த் தகவல்களைப் பரப்பிப் பார்த்தனர். அயலகத் தமிழர் நாள் விழாவில் உற்சாகத்துடன் பங்கேற்ற நான், தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக இருக்கும் போது எனக்கென்ன குறைச்சல் என்று கேட்டேன். நான் நலமாகவும் உற்சாகமாகவும் இருக்கிறேன். உழைக்கிறேன்… உழைக்கிறேன்… உழைக்கிறேன்…

**ஒரு பொய் உடைந்து நொறுங்கியதால், அடுத்து ஒரு பரபரப்புக்காக, துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கப்படவிருக்கிறது என்ற வதந்தியைப் பரப்பத் தொடங்கினர். அதற்கு இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் தம்பி உதயநிதி அவர்களே, “எல்லா அமைச்சர்களும் முதலமைச்சருக்குத் துணையாகத்தான் இருக்கிறோம்” என்று பதிலடி கொடுத்து, வதந்தி பரப்பியோரின் வாயை அடைத்துவிட்டார்.**

**இளைஞரணி மாநாட்டின் மாநில உரிமை முழக்கம் எனும் நோக்கத்தைத் திசை திருப்ப நினைக்கும் எந்த முயற்சிகளுக்கும் கழகத்தினர் யாரும் இடம் கொடுத்திட வேண்டாம். மாநில உரிமைகளைக் காத்து கூட்டாட்சி இந்தியாவை உருவாக்கும் நோக்கத்தைச் செயல்படுத்துவதே, சேலம் இளைஞர் அணி மாநாட்டின் நோக்கமாகும். அந்த நோக்கத்தின் எதிரிகள்தான் இது போன்ற உள்நோக்கம் கொண்ட வதந்திகளைப் பரப்புகிறார்கள்.**

கழகத் தலைவர் என்கிற பொறுப்பு உங்களில் ஒருவனாகிய எனக்கு உடன்பிறப்புகளாகிய உங்களின் ஒப்புதலுடன், பொதுக்குழுவின் ஒட்டுமொத்த ஆதரவுடன் வழங்கப்பட்டிருக்கிற பொறுப்பு. முதலமைச்சர் என்கிற பொறுப்பு உடன்பிறப்புகளின் அயராத உழைப்பிலும் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவாலும் கிடைத்தது ஆகும். நம்பிக்கை வைத்து பொறுப்பினை வழங்கிய உங்களின் நலனுக்காக, என் சக்திக்கு மீறி உழைக்கின்ற வலிமை என்னிடம் உள்ளது. தலைவர் என்ற உரிமையோடும் அன்போடும் கட்டளையிடுவது, திசை திருப்பும் வதந்திகளில் கவனத்தைச் சிதறடிக்காமல், மாநாட்டின் மைய நோக்கமான, மாநில உரிமை மீட்பு முழக்கத்தை முன்னெடுங்கள்! நாடு தழுவிய அளவில் அதுவே முதன்மைச் செய்தியாகட்டும்!

எப்போதும் பொங்கல் அன்று கழகத் தோழர்கள் என்னைச் சென்னையில் வந்து சந்திப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளீர்கள். இம்முறை கழகத்தின் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களும், உள்ளாட்சிப் பிரதிநிதிகளும் அவரவர் பகுதிகளுக்குட்பட்ட இடங்களில் பொது மக்களின் பங்கேற்புடன் தமிழர் திருநாளைச் ‘சமத்துவப் பொங்கல்’ என்று பெயரிட்டு எழுச்சியுடன் கொண்டாட வேண்டும். கழக உடன்பிறப்புகளுக்கும் மக்களுக்கும் பொங்கல் பரிசுகளை வழங்கிடுங்கள். அனைத்து மதத்தினரும், சாதியினரும் கலந்து கொள்ளும் சமத்துவப் பொங்கலாய் இது அமைந்திட வேண்டும்.

குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் எனத் தனித்தனியாகப் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தி, சல்லிக்கட்டில் வெற்றி பெறும் காளைகள் – மாடுபிடி வீரர்கள் என வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்க வேண்டும்.

கழகத்தினர் அனைவரது இல்லங்களிலும் ‘சமத்துவப் பொங்கல்’ எனக் கோலமிட்டு, அதனைச் சமூக வலைதளங்களில் பகிருங்கள்! அதுதான் தலைநகரில் பொங்கல் கொண்டாடும் எனக்கு நீங்கள் தரும் இனிப்பான பொங்கல் வாழ்த்தாகும்.

**பொங்கல் கொண்டாட்டம் தரும் ஊக்கத்தோடு, நமக்குக் காத்திருக்கும் பணிகள் இரண்டு! தாய்த் தமிழ்நாட்டை மேம்படுத்துவது முதலாவது. இந்திய ஒன்றிய அரசில் சமூகநீதி – சமதர்ம மதச்சார்பற்ற நல்லரசை அமைப்பது இரண்டாவது. இவை இரண்டையும் அடைய எந்நாளும் பாடுபடுவோம்.**

உயிர்நிகர்த் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகள் அனைவருக்கும் உங்களில் ஒருவனின் இனிய பொங்கல் தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள்!

அன்புடன்,

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054
மார்கழி 28
13.01.2024


“பொங்கல் கொண்டாட்டம் தரும் ஊக்கத்தோடு, நமக்குக் காத்திருக்கும் பணிகள் இரண்டு! தாய்த் தமிழ்நாட்டை மேம்படுத்துவது முதலாவது. இந்திய ஒன்றிய அரசில் சமூகநீதி – சமதர்ம மதச்சார்பற்ற நல்லரசை அமைப்பது இரண்டாவது. இவை இரண்டையும் அடைய எந்நாளும் பாடுபடுவோம்.”



ஜனவரி 21, சேலத்தில் நடைபெறும் தி.மு.க இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டு நிதியாக,கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ரூபாய் ஒன்றரை கோடிக்கான காசோலையையும் மற்றும் கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் ரூ.12 லட்சத்திற்கான நிதியும், ஆக மொத்தம் ரூபாய் ஒரு கோடியே 62 லட்சம் மாநாட்டு நிதியினை, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்பு திட்டம் செயலாக்கத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். உடன் மாவட்டப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், கழக பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன், அ.ஞானமுத்து, ஜி.கார்த்திகேயன், தங்க.ஆனந்தன், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ் விஜயராமன், க.முத்துக்குமார், வி.கே.மணிகண்டன், வி.ஜே அன்பழகன், குட்டிமணி ஜெகன், து.பிரபு, ஏ.ஜெயமணி, ஏ. ஜெயச்சந்திரன், பி.ராம்குமார் சே. குப்புராஜ், நா. கோபி உள்ளிட்டோர் உள்ளனர்.



வேலூர் மாவட்ட தி.மு.க அவசர செயற்குழு கூட்டத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார். இதில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், பொருளாளர் சி.நரசிம்மன், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட துணை செயலாளர்கள் பாண்டியன், மலர்விழி லோகநாதன், முன்னாள் அமைச்சர் டாக்டர் வீ.எஸ்.விஜய் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் (ம) கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் சேலம் 2 வது இளைஞர் அணி மாநில மாநாடு நிதியாக ரூபாய் ஒரு கோடியினை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார். உடன் கழக வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி ஷங்கர், தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம் ஆகியோர் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் வாழப்பாடியில் உள்ள அலுவலகத்தில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.ராஜேந்திரன், எம்.எல்.ஏ, மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி, சுரேஷ்குமார், சின்னதுரை, கோமதி, மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், கருணாநிதி, தமிழ்ச்செல்வன், புஷ்பராஜ், ஏ.ஏ.ஆறுமுகம், பிரபு, பிரண்ட்ஸ் ரமேஷ், ராஜசேகர், அருண், தனசேகரன், ராஜவேல், சேகர், திருநாவுக்கரசு, மலர் விழி, சந்திரமோகன், முத்துலிங்கம் மனோகரன், சோமசுந்தரம், சங்கர் கோபால், ராஜா, மாணிக்கம், வெண்ணிலா சேகர், உமா சங்கர், விஜயகுமார், ரத்தினவேல், சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், சிவராமன், மூர்த்தி, தங்க மருதமுத்து, ராஜேந்திரன், டாக்டர் செழியன், அழகுவேல், மணி, பாலமுருகன், சித்தார்த்தன், பாலசுப்பிரமணியம், வேல்முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் தலைமையில்

# சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை !

சேலம், ஜன. 14-

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. தளபதி மு.க. ஸ்டாலின் அறிவாலயத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது, சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமையில், கழக முதன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே.என்.நேரு பங்கேற்று பேசினார்,

அப்போது பெத்தநாயக் கன்பாளையத்தில் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு வரும் 21 ம் தேதி நடைபெறுவது குறித்து ஆலோசித்தனர், பின்னர் சேலம் கிழக்கு மதியம் மேற்கு மாவட்டங்களில் இருந்து 1.5 லட்சம் இளைஞர்கள் நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்ள வேண்டுகோள் விடுத்துள்ளார், இதில் சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் இரா. ராஜேந்திரன் எம்.எல்.ஏ., சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி.எம். செல்வகணபதி, மாவட்ட துணைச் செயலாளர்கள் பாரப்பட்டி சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி, மாவட்ட பொருளாளர் ஆத்தூர் ஸ்ரீராம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டாக்டர் வீரபாண்டி பிரபு, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ. ஆறுமுகம், ஏற்காடு தொகுதி பொறுப்பாளர் புஷ்பராஜ், மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தும்பல் கணேஷ், மனோகரன், சங்கர், பொதுக்குழு உறுப்பினர்கள் தமிழ்செல்வன், சோமசுந்தரம், மலர்விழி ராஜா, முத்துலிங்கம், சந்திர மோகன், ராஜா, கோபால், நகரச் செயலாளர் பாலசுப்பிரமணியம், வேல்முருகன்,

ஒன்றிய செயலாளர்கள் சக்கரவர்த்தி, மாதேஸ்வரன், வெள்ளாளப்பட்டி மூர்த்தி, அன்பு, சிவராமன், அழகுவேல், மணி, பாலமுருகன், விஜியகுமார், ரத்தினவேல், ஒன்றிய துணை செயலாளர், சேர்மேன் அன்பழகன், பழங்குடியின நல வாரிய உறுப்பினர் தாடி வெங்கடேசன், மாவட்ட அமைப்பாளர்கள் முனைவர் சீனிவாசன், ஆத்தூர் சேகர், ரமேஷ், திருநாவுகரசு, தனசேகரன், ராஜசேகர், பேரூர் செயலாளர்கள் வெங்கடேசன், பி.சி.செல்வம், சுப்பிரமணியன், பாபு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் பழனிசாமி, கலைச்செல்வன், ரேவதி மாதேஸ்வரன், ரமேஷ், தனபால், பன்னீர்செல்வம், கோபி,

பேரூராட்சி மன்ற தலைவர்கள் ராஜா, ஜெயசெல்வி பாலாஜி, பழனியம்மாள் ராசாமணி, கவிதா சக்கரவர்த்தி, ஒன்றிய அவைத் தலைவர்கள் சோலை கோவிந்தன் மாணிக்கம் ராமகிருஷ்ணன் சீனிவாசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஆறுமுகம், மாதேஸ்வரி மாது. அசலாம்பு பூபதி, காசிலிங்கம், கலாபெரியசாமி, பேரூராட்சி கவுன்சிலர்கள் சாந்தகுமாரி சரவணன், குமார், ராணி மாதேஸ்வரன் இங்கராணி மாதேஸ்வரன், கிளை செயலாளர்கள் சங்கர், சி.எம்.ஆறுமுகம் உள்பட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.




### விருதுநகர் வடக்கு மாவட்டம்

# விருதுநகர் நகர தி.மு.க. சார்பில் தைப் பொங்கல் புத்தாண்டு விழா !

### அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு பங்கேற்பு !

விருதுநகர், ஜன. 14-


விருதுநகர் வடக்கு மாவட்டம் விருதுநகர் நகர தி.மு.க. சார்பில் தமிழ்ப் புத்தாண்டு தைப்பொங்கல் விழா தை 1ம் தேதி அன்று பேரறிஞர் அண்ணா சிலை அருகில் நடைபெற உள்ளது. இந்த விழாவில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு கலந்து கொள்கின்றனர்.

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஏ ஆர் ஆர் சீனிவாசன் கழக கொடியினை ஏற்றி வைக்கின்றார். நகர மன்ற தலைவர் எஸ். ஆர். எஸ். ஆர். மாதவன் பொங்கல் வழங்குகின்றார். இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் கே.கே. எஸ். எஸ்.வி.டி.சுப்பாராஜ், வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆவுடையம்மாள், ஒன்றிய பெருந்தலைவர் சுமதி ராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், ஆர்.சுதாகர் தலைமை, ஸ்ரீராம் காசிராஜன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர் கிருஷ்ணகுமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, எஸ்.கோதண்டராமன், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ஆர்.சுபேதா, நகர துணைச் செயலார் ஏ.எஸ். கே.ரமேஷ்குமார், வை. மலைராஜன், எஸ்.ஆர்.எஸ். ஆர் மதன்குமார், எம்.கார்த்திகேயன், வக்கீல் எம்.எஸ். அசோக், வி.கே.சங்கர் ராஜ், பெருமாள்சாமி, ஆர். ராஜசெல்வம், கே.சௌந்தர் ராஜன், பொ. முருகன், எஸ் சபரி, ஆர்.பழனிச்சாமி, எஸ் நடராஜன், ஏ.சோசப்ராஜ், பி.ஜெகன் பால் பாண்டியன், ஜி.செல்வேந்திரன், ஏ.அண்ணா துரை, எ. போஸ், என். காஜாமைதீன், முரசொலி கந்தசாமி, எம். குருசாமி, ஜி.சதீஸ் சுந்தர், எல்.திருமாறன், ஸ்ரீ ராமநாதன், பி.ஏ.ஸ்ரீனிவாசகம், பி.மாரியப்பன், எம்.முருகன், ஏ.பி.காமராஜ், டி.ஆர். பி.ராஜரத்தினம், வகிதா ரகுமான், அ.மரியராசு, ஆர். பிர்தௌசி, இப்ராஹிம், கே.எம்.குமார் கலந்து கொள்கின்றனர்.

மறைந்த நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.ராஜாக்கனி அவர்களின் நினைவுத் தூணுக்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் நேஷனல் ராமர் மாலை அணிவிக்கிறார். நிகழ்ச்சியினை நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன் செய்து வருகின்றார்.

## இதுவரை எந்த முதல்வரும் சந்தித்திராத

# சோதனைகளுக்கிடையே சாதனை படைத்திடும் தளபதி!



**“உலக முதலீட்டாளர் மாநாடு! சாதித்துக் காட்டிய முதலமைச்சர், தலைநிமிரும் தமிழ்நாடு; எப்போதெல்லாம் தி.மு.கழகம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் தமிழ்நாடு மாபெரும் வளர்ச்சியை அடைந்துள்ளது”** என்று, பேரறிஞர் அண்ணா தமிழ்நாட்டு முதலமைச்சராகப் பதவி ஏற்ற காலத்தில் நாட்டில் இருந்த பஞ்சத்தை எடுத்துக்காட்டி, பஞ்சம் பிழைக்கப் பலரும் மும்பை (அன்றைய பம்பாய்) போன்ற மாநிலங்களுக்கு வேலை தேடிச் செல்லுமளவு இருந்த நிலையை விவரித்து, அண்ணா அவர்களும், அவரைத் தொடர்ந்து கலைஞர் அவர்களும் தங்களது ஆட்சிக் காலங்களில் எப்படியெல்லாம் திட்டங்கள் தீட்டி பஞ்சத்தின் கோரப்பிடியில் கிடந்த தமிழ்நாட்டை அதிலிருந்து மீட்டனர் என்பதற்கு அடுக்கடுக்காய் ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி ‘தமிழ்க் கேள்வி’ இணையதள ஆசிரியர், மூத்த ஊடகவியலாளர் திரு.தி.செந்தில்வேல் எழுதிய கட்டுரை ஒன்று, இரு தினங்களுக்கு முன் ‘முரசொலி’யில் வெளிவந்துள்ளதை பலரும் படித்திருப்பார்கள்.

தமிழினத் தலைவர், கலைஞர் காலத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சி ஒரு பகுதியில் மட்டுமின்றி, தெற்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு என எல்லாப்பகுதிகளிலும் பரவி விரிந்திட திட்டங்கள் தீட்டப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டதை அவர் ஆதாரங்களோடு விளக்கியிருப்பது, கண்மூடித்தனமாக கலைஞரை விமர்சிக்கும் அரைவேக்காட்டுக் கூட்டத்திற்குத் தரப்பட்ட கசையடியாய் காட்சியளிக்கிறது.

**1996-ல் கலைஞர், தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற காலகட்டத்தில், கணினியின் பயன்பாடு குறித்து பெரிய அளவு புரிதல்கள் இல்லாத போதே, முத்தமிழறிஞர் கலைஞர் கணினிதான் இனி வரும் காலம் என்பதை உணர்ந்து, கணினி சார்ந்த முதலீடுகளை ஈர்க்க அனைத்து முயற்சிகளையும் தொடங்கிய தன் விளைவால்தான் ‘டைடல் பார்க்’ உள்ளிட்ட ஏராளமான மென்பொருள் பூங்காக்கள் தமிழ்நாட்டில் கால்பதித்தன. இன்று நம் பிள்ளைகள் மென்பொருள் நிறுவனங்களில் லட்சத்தில் ஊதியம் பெறுகின்றனர் என்றால் அதற்கு வித்திட்டது தி.மு.கழக அரசு!**

வளர்ச்சிக்கு இன்றியமையாதவை போக்குவரத்தும், மின்சாரமும்! ஒவ்வொரு கிராமத்துக்கும் மின்சாரத்தைக் கொண்டு போய்ச் சேர்த்தது தி.மு.கழக அரசு.



போக்குவரத்தை நாட்டுடைமையாக்கி, மினி பஸ்களை அறிமுகப்படுத்தி கிராமம், நகரம் என்று எல்லாப் பகுதி மக்களுக்கும் போக்குவரத்து கிடைக்க வசதி செய்ததோடு – அதன்மூலம் கிராமம் – நகரம் எல்லாவற்றையும் இணைத்தது, கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு!



**தி.செந்தில்வேல்**
‘தமிழ்க் கேள்வி’ இணையதள ஆசிரியர்

இவற்றை எல்லாம் விலாவாரியாகத் தொகுத்தளித்துள்ள திரு.செந்தில்வேல், கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் தளபதி ஸ்டாலின் தலைமையிலான கழக அரசு செய்துள்ள சாதனைகளையும் நினைவுகூர்ந்து பெருமிதம் கொண்டுள்ளார் அந்தக் கட்டுரையில்!

- ★ **கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு மருத்துவமனை.**
- ★ **மதுரையில் கலைஞர் நூற்றாண்டு பிரம்மாண்ட நூலகம்.**
- ★ **கீழடி அருங்காட்சியகம்.**
- ★ **பள்ளி சிறார்களுக்கு காலை உணவுத் திட்டம்.**
- ★ **பெண் பிள்ளைகளின் உயர்கல்விக்கு மாதம் ஆயிரம் ரூபாய்.**
- ★ **மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணம்.**
- ★ **அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்.**

என தளபதி ஸ்டாலினின் சாதனைப் பட்டியலை வெளியிட்டு, இறுதியாக, **இந்தச் சாதனைகளுக்கு வைக்கப்பட்ட மகுடமாக உலக முதலீட்டாளர் மாநாடு அமைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்!**

திரு.செந்தில்வேல் குறிப்பிட்ட நமது முதல்வர் தளபதியின் சாதனைப் பட்டியலில், ‘மகளிருக்கு மாதம் ரூபாய் ஆயிரம் உரிமைத் தொகை’யாகத் தந்திடும் திட்டம், ‘நான் முதல்வன்’ திட்டம் போன்ற பல திட்டங்கள் இடம் பெறவில்லை.

**இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் இத்தனை சாதனைகளா? என்று எண்ணும்போது இதயம் இறும்பூதெய்துகிறது! அதே நேரத்தில், இந்தச் சாதனைகளை சாதித்திட்ட தளபதி, இந்தக் கால கட்டத்தில் சந்தித்த எதிர்ப்புகள் எத்தகையது என்பதை, விருப்பு வெறுப்புகளை மறந்து எண்ணிப் பார்த்தால் பிரமிப்பூட்டுவதாகவே அது உள்ளது!**

தமிழ்நாட்டை ஆண்ட எந்த முதல்வரும் அவர்களது ஆட்சிக் காலங்களில் இத்தகைய தடைகளைச் சந்தித்ததில்லை எனும் அளவு தளபதி, ஆட்சிக் கட்டிலில் ஏறியது முதல் பல தடைகளைச் சந்தித்தார்!

- **கொரோனாவின் உச்சகட்டம்.**
- **மழை, வெள்ளம், புயலின் கோரத் தாண்டவம்; அதுவும் ஒரு முறையல்ல, இரண்டரை ஆண்டு கால ஆட்சியில் இரண்டு மூன்று முறைகள்.**
- **ஒன்றிய சர்வாதிகார ஆட்சியின் எதேச்சதிகார கோரத்தாண்டவம்!**
- **ஆளுநர் என்ற பெயரில், கழக ஆட்சியின் சாதனை வேகத்தைத் தடுக்க அனுப்பிய பேர்வழியின் அட்டகாசம்! எல்லா மக்கள் நலத் திட்டங்களுக்கும் தடை!**
- **அமலாக்கத்துறை, வருமானவரி துறை போன்றவைகளை அனுப்பி, அமைச்சர்களின் பணிகளை முடக்கிடும் வகையில் பல சோதனைகள்! வழக்குகள்!**

– இப்படி எல்லாப் பக்கமிருந்தும் சோதித்த தாக்குதல்களை எதிர்கொண்டு நமது தமிழக முதல்வர் சாதித்த சாதனைப் பட்டியலைக் காணும்போது, ஒவ்வொரு கழகத் தொண்டனும் ‘தான் ஒரு தி.மு.கழகக்காரன்’ என்பதில் பெருமிதம் கொள்கிறான்! பூரிப்படைந்து நெஞ்சு நிமிர்த்தி நடைபோட்டுக் கொண்டிருக்கிறான்!



**எத்தனை காலம் ஆட்சியில் இருந்தோம் என்பதல்ல; இருந்த காலத்தில் நம்மை நம்பியிருக்கும் மக்களின் மகிழ்ச்சிக்கு என்ன செய்தோம்; செய்யப் போகிறோம் என்ற சிந்தனையோடு தூக்கத்தைத் தொலைத்து, ஓய்வுக்கு விடைகொடுத்துச் செயல்படும் தலைவர்களைக் கொண்டிருந்த, கொண்டிருக்கும் ஒரே இயக்கம், தி.மு.கழகம்தான்!**

**“இந்த இயக்கத்தால் தனக்கு என்ன லாபம் என்று கருதிச் செயல்படுபவன், அந்த இயக்கத்தின் புற்றுநோய்! தன்னால் இந்த இயக்கத்துக்கு என்ன லாபம் என எண்ணிச் செயல்படுபவன் அந்த இயக்கத்தின் இரத்தநாளம்”** என, முத்தமிழறிஞர் கலைஞர் கூறியது போல இரத்த நாளங்களாகச் செயல்படும் இலட்சோப இலட்சம் தொண்டர்களை இந்த இயக்கம், கொண்டிருப்பதால், அவர்களது பக்கபலம் என்றும் ஒரு உந்து சக்தியாக இருக்கும் என்பதால்தான், பல திக்குகளிலிருந்தும் வரும் எதிர்ப்புகளை துச்சமென எதிர்கொண்டு – சாதனைகளைப் படைத்து வருகிறார் தளபதி ஸ்டாலின்!

**“முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலினாகிய நான்”** – எனக் கூறி அவர் பதவி ஏற்ற நாள் முதல் அவர் சந்தித்து வரும் சோதனைகளை, தமிழகத்தில் இதுவரை முதலமைச்சராகப் பணியாற்றிய யாரும் சந்தித்திருக்க இயலாது! அத்தனை பலமுனைத் தாக்குதல்களையும் சந்தித்து எதிர்கொண்டு, அதேநேரத்தில் மக்கள் நலப் பணிகளையும் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார் நமது முதல்வர்! **“மக்கள் மகிழ்ச்சி ஒன்றே தனக்கு மாமருந்து”** – என ஓய்வுக்கு விடை தந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் நமது முதல்வரைக் காணும்போது;

**‘இங்கிவனை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்’ – என ஒவ்வொரு தமிழ் நெஞ்சமும் உவகையில் கூத்தாடத்தானே செய்யும்!**



**சிலந்தி**

## தென் மாவட்ட மழை வெள்ள மீட்பு நடவடிக்கைகளில்

# தமிழ்நாடு அரசு சிறப்பாகச் செயல்பட்டுள்ளது!

## ஒன்றிய அரசின் குழுவினர் பாராட்டு!

தூத்துக்குடி, ஜன. 14 –

தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கடந்த டிசம்பர் 17 மற்றும் 18ம் தேதிகளில் கனமழை கொட்டி தீர்த்தது. கனமழையால் நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. கடந்த 19ம் தேதி டெல்லியில் பிரதமர் நரேந்திரமோடியைச் சந்தித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மழை பாதிப்புகள் குறித்து எடுத்துரைத்து வெள்ள நிவாரண நிதியாக 37 ஆயிரத்து 907 கோடி ரூபாயை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தொடர்ந்து மழை பாதிப்புகளை பார்வையிட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மழையால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடும்பத்தினருக்கு 6 ஆயிரம் ரூபாயும், குறைந்த பாதிப்புள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக அறிவித்தார்.

இந்நிலையில் ஒன்றிய அரசின் குழுவினர் டிசம்பர் 20 மற்றும் 21 ஆம் தேதிகளில் தூத்துக்குடி மற்றும் நெல்லையில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் மழை பாதிப்புகளைப் பார்வையிட்டார். இருப்பினும் ஒன்றிய அரசு நிவாரண நிதியை இதுவரை வழங்கவில்லை. இந்நிலையில் கனமழையால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மற்றும் நெல்லை மாவட்டத்தில் ஒன்றிய அரசின் குழுவினர் இரண்டாவது முறையாக ஆய்வு செய்து வருகின்றனர்.

தேசிய பேரிடர் மேலாண் குழுவின் ஆலோசகர் கே.பி.சிங் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வு செய்தனர். தொடர்ந்து இந்தக் குழுவினர் திருநெல்வேலி மாவட்டத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

ஒன்றிய அரசின் குழுவினர் நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் கார்த்திகேயன் மற்றும் அதிகாரிகளுடன் மழை பாதிப்பு குறித்து கேட்டறிந்தனர். தொடர்ந்து ஒன்றிய அரசின் குழுவினர் இரண்டு குழுக்களாகப் பிரிந்து மழைப்பாதிப்புகளை பார்வையிட்டு ஆய்வு செய்து வருகின்றனர். கருப்பன்துறை பகுதியில் ஒன்றியக் குழுவினர் ஆய்வு செய்தனர்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய ஊரக வளர்ச்சி துறை கூடுதல் இயக்குனர் கே.எம்.பாலாஜி, தென் மாவட்ட மழை வெள்ள மீட்பு நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்பட்டுள்ளதாக பாராட்டுத் தெரிவித்தார்.

ஒன்றிய அரசின் குழுவினர் மழையால் சேதமடைந்த சாலைகள், குளங்கள், விளைநிலங்கள், சேதமடைந்த பயிர்கள் உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதேபோல் சீவலப்பேரி பகுதியில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டப்பகுதியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளையும் ஒன்றிய அரசின் குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்கின்றனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக INDIA கூட்டணி கட்சிகளின் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். உடன் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உள்ளார்.

# கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டில் பெருந்திரளாக பங்கேற்போம்!

## பூண்டி.கே.கலைவாணன் பங்கேற்ற மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர்,ஜன14.

எதிர்வரும் ஜனவரி 21அன்று சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் பெருந்திரளாக பங்கேற்று வரலாற்று சாதனைபடைப்போம் என பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்ற திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தீர்மானங்களை விளக்கி பேசினார். மாவட்ட ஊராட்சி பெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், பொருளாளர் மு. வெங்கடேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ். பாண்டியன்,கோ.செல்வம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் , தமிழ்நாடு முதலவர் ,திராவிட நாயகர், கழக தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும், இளைஞர்களின் எழுச்சி நாயகர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், இளைஞரணி செயலாளர் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெறும் மாநில இளைஞர் அணி இரண்டாவது மாநாட்டில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான திருவாரூ ரில் இருந்து பெருந்திரளான இளைஞர்கள் வெண்ணிற சீருடை யுடன் கலந்து கொண்டு இந்த மாநாட்டை வரலாற்றில் இடம்பிடிக்கும் வகையில் செய்வது ,

தமிழர்களின் திருநாளாம் தைத்திங்கள் முதல்நாளை புத்தாண்டை கொண்டாடி, பொங்கல் திருநாளில் ஒன்றிய நகர பேரூர் மற்றும் வார்டு கிளை கழகங்களில் கழக கொடி ஏற்றி , பொதுமக்களுக்கு இனிப்புக்கள் வழங்குவது, தலைமை கழகத்தால் வழங்கப்பட்டிருக்கும் உறுப்பினர் அடையாள அட்டைகளை பொங்கல் திருநாட்களுக்குள் வழங்கி பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிப்பது, தலைமை கழகத்தால் அறிவுருத்தப்பட்டிருக்கும் பத்து வாக்குச்சாவடிக்கு ஒரு மேற்பார்வை யாளரை உடனடியாக நியமிப்பது, கொடுக்கப்பட்டிருக்கும் தலைமைக் கழக படிவங்களை பூர்த்தி செய்து மாவட்டக் கழகத்தில் ஒப்படைப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் – தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு வீர விளையாட்டான உலக தரம் வாய்ந்த கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் ஜல்லிக்கட்டு மைதானத்தை திறந்து வைக்க வருகை தருவதில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்வது, உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் சேலத்தில் நடைபெறும் மாநில இளைஞரணி மாநாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்வது சம்பந்தமான செயல்வீரர்கள் கூட்டத்தில் மாணவர் மாவட்டச் செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ. வேலுசாமி, பெ.குழந்தை வேலு, மா ஜெயராம்,தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், முருகவேல், ராகவன், அக்ரி கணேசன், ஆர் கணேசன், வீர கணேசன், பாக்கியநாதன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.




இராமநாதபுரம் திராவிட முன்னேற்றக் கழக தகவல் தொழில் நுட்ப அணியின் சார்பில் சமூக ஊடகங்கள் மற்றும் வலைதளங்களுக்கான பயிற்சி பாசறையை இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ .முருகேசன், மண்டல தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் விஜய கதிரவன், மாவட்டத் துணைச் செயலாளர் கே. கருப்பையா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



தேனிவடக்கு மாவட்டம் தேனி என்.ஆர்.டி. மண்டபத்தில் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில் தகவல் முன்னெடுப்பில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சரவணகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவைத் தலைவர் செல்லப்பாண்டி. மாவட்ட துணை செயலாளர், திருக்கண்ணன். ஒன்றியச் செயலாளர்கள் சக்கரவர்த்தி. கண்ணியம்பட்டி முருகேசன். நகரச் செயலாளர்கள் நாராயண பாண்டியன், இலியாஸ்.புருஷோத்தமன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ராஜேஷ். வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆசிப் கான், போடி தொகுதி தகவல் தொழில்நுட்பஅணி மகேஸ்வரன்.மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## ஆட்சியர் மருத்துவர் ச.உமா தலைமை! தி.வேல்முருகன் எம்.எல்.ஏ. முன்னிலை!

# ‘கேலோ இந்தியா 2023’ விழிப்புணர்வு மாரத்தான் போட்டி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தொடங்கி வைத்தார்!

நாமக்கல், ஜன 14-

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் நாட்டிலுள்ள இளைஞர்களிடையே விளையாட்டு கலாச்சாரத்தை வளர்பதற்கும் விளையாட்டில் சிறந்து விளங்குவதற்கும் ஒன்றிய அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற ஒருங்கிணைந்த விளையாட்டு நிகழ்வாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் அடிப்படையில், கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடத்துவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்பட்டு 2023ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளை தமிழ்நாட்டில் சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் வரும் 19.01.2024 முதல் 31.012024 வரை நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளின் செய்தியையும், உணர்வையும் பரப்பிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் விளம்பரம் மற்றும் கேண்டர் (டார்ச்) (Canter) சுற்றுப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கேண்டர் நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்தது. இதனையொட்டி நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா கேலோ இந்தியா 2023 விழிப்புணர்வு மினி மாரத்தான் போட்டி மற்றும் விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த அலங்கார ஊர்தியானது மாவட்ட விளையாட்டு அரங்கம், சி.எம்.எஸ் கல்லூரி, திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கல்லூரி, அக்ஷரா அகாடமி, நாமக்கல் வேலம்மாள் பள்ளி ஆகிய இடங்களில் மாணவ - மாணவிகள் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அரசு உறுதிமொழி குழுத் தலைவர் /பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன் தலைமையில், குழு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. அருள் (சேலம் மேற்கு), மொ.பழனியாண்டி (ஸ்ரீரங்கம்), சட்டமன்ற உறுப்பினர்கள் கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), பெ.ராமலிங்கம் (நாமக்கல்), ஈ.ஆர்.ஈஸ்வரன் (திருச்செங்கோடு) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கேலோ இந்தியா 2023 போட்டிகளை முன்னிட்டு நடைபெற்ற மினி மாரத்தான், திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, கட்டுரை போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப்போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 18 நபர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

# இராமநாதபுரத்தில் சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு!

## காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

இராமநாதபுரம், ஜன.14-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், அவர்களின் வழிகாட்டுதலின்படி இராமநாதபுரம் திராவிட முன்னேற்றக் கழக தகவல் தொழில் நுட்ப அணியின் சார்பில் சமூக ஊடகங்கள் மற்றும் வலைதளங்களுக்கான பயிற்சி பாசறையை இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ .முருகேசன், மண்டல தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் விஜய கதிரவன், மாவட்டத் துணைச் செயலாளர் கே. கருப்பையா,இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே. கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் பகத்சிங் சேதுபதி, இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கே சம்பத் ராஜா,வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் எம் கருணாநிதி மாவட்ட தலைவர் ஆர் வீர பாண்டியன் இலக்கிய அணி மாவட்ட தலைவர் மிஷா ஆ.வே. அரவரசன், அமைப்பாளர் வை. மணிமாறன்

சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு முகமது முக்தார், சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் முகமது சலாவுதீன், தொண்டரணி அமைப்பாளர் மாவட்ட தலைவர் ராமமூர்த்தி, மாவட்ட அமைப்பாளர் பிடி ராஜா, தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் கா.தங்கராஜ், மாவட்ட அமைப்பாளர் மு.ரவிக்குமார், நெசவாளர் அணி மாவட்ட தலைவர் சௌ கணேஷ் பாபு, மாவட்ட அமைப்பாளர் கோ.சந்திரசேகர், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் பாஸ்கர பாண்டியன், மாவட்ட தலைவர் கு அருண், மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் தமிழ்ச்செல்வி போஸ், மாவட்டத் தலைவர் மஞ்சுளா, விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் ரா .அய்யனார், தலைவர் பாலகிருஷ்ணன், விவசாய தொழிலாளர் அணி மாவட்ட அமைப்பாளர் அ. அர்ச்சுனன்,நாகரத்தினம், மீனவர் அணி மாவட்ட தலைவர் வே. வில்லாயுதம், மாவட்ட அமைப்பாளர் வர்த்தக அணி மாவட்ட தலைவர் நா திருமாறன், மாவட்ட அமைப்பாளர் மு தமிழ்செழியன், மகளிர் தொண்டரணி மாவட்ட தலைவர் பிரபா சாலமன், மாவட்ட அமைப்பாளர் அமிர்தவல்லி மருத்துவர் அணி மாவட்ட தலைவர் தி சந்திரமோகன், மாவட்ட அமைப்பாளர் மு ஆசிக் அமீன், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் சே சுரேஷ், அமைப்புசாரா தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் சுந்தர வடிவேலு, மாவட்ட அமைப்பாளர் ராஜீவ் காந்தி, அயலக அணி மாவட்ட அமைப்பாளர் மா பன்னீர்செல்வம், மாவட்ட தலைவர் நா முகமது அனிபா, ஆதிதிராவிடர் நல உரிமை பிரிவு மாவட்டத் தலைவர் மு தங்கவேலு, மாவட்ட அமைப்பாளர் வி ஆனந்தம் /மாநில செயற்குழு உறுப்பினர் மிஷா அகமது தம்பி,பரமக்குடி நகர் செயலாளர், நகர் மன்ற உறுப்பினர் ஜீவரத்தினம் மற்றும், மற்றும் அனைத்து அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் துணைத் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தினை திறந்து வைக்க வருகை தரும் கழக தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பல்லாயிரக்கணக்கான கழகத்தினர் திரண்டு வரவேற்பு கொடுப்பது மற்றும் சேலம் இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பது குறித்த மதுரை தெற்கு மாவட்டச் செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் திரளான கழகத்தினர் உள்ளனர்.

## ஜன.25 - மொழிப் போர்த் தியாகிகளுக்கு

# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

## சென்னையில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், ஆவடி - பொதுச் செயலாளர் துரைமுருகன், மன்னார்குடி - பொருளாளர் டி.ஆர்.பாலு, திருச்சி - முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு!

**இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள்**
**எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!**
**செந்தமிழுக்குத் தீமைவந்த பின்னும் இந்தத்**
**தேகம் இருந்தொரு லாபமுண்டோ?**
**விந்தைத் தமிழ்மொழி எங்கள் மொழி! - அது**
**வீரத் தமிழ் மக்கள் ஆவி என்போம்!**

**சிங்கமென்ற இளங்காளைகளே - மிகத்**
**தீவிரங் கொள்ளுவீர் நாட்டினிலே!**
**பங்கம் விளைத்திடல் தாய்மொழிக்கே - உடற்**
**பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!**

**-பாவேந்தர்**

- பெரும் சிறப்புப் பெற்ற நம் தாய் மொழியாம் தமிழ்மொழி, நீராலும் - நெருப்பாலும், வஞ்சகர்களின் வெறுப்பாலும் வெல்லமுடியாத - வீழ்த்த முடியாத செம்மாந்த மொழியாகும்! தத்தமது உரைநடையின் வாயிலாகவும், கவிதைத் தீரமுடனும் தமிழறிஞர்கள்பலர் தங்கள் விழியெனப் போற்றி வளர்த்த வண்டமிழ் மொழியாகும்.

- 1938ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தமிழ்நாட்டு மாணவர்கள் இனி இந்தி கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று அறிவிப்பினை எதிர்த்து, 27.02.1938 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டில், தாய் மொழியைக் காக்க இந்தித் திணிப்பினை எதிர்க்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டு அதனடிப்படையில், தந்தை பெரியார், மறைமலை அடிகள், திரு. வி.க., நாவலர் சோமசுந்தர பாரதி, பேரறிஞர் அண்ணா போன்ற தமிழறிஞர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் தாய் மொழி காக்க களம் கண்டனர்.

அப்போது, 14 வயதே ஆன பள்ளி மாணவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருவாரூர் வீதியில் தன்னுடன் பயிலும் மாணவர்களை அணி திரட்டி, "கயல், வில், புலி" சின்னம் பொறித்த தமிழ்க் கொடியினை கையிலேந்தி,

**"ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! - நீ**
**தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே!"**

என்று, இந்தித் திணிப்பு எதிர்ப்பு போர்ப்பரணி பாடி, தமிழ்மொழி காக்கும் போர்வீரராய் முன்வந்தார்.

அன்னைத் தமிழ் காக்க, முதற்கட்ட இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, சிறை சென்ற நடராசன் 15.01.1939 அன்றும்; தாளமுத்து 12.03.1939 அன்றும் வீர மரணம் அடைந்தனர். தமிழக மக்களின் தொடர் போராட்டத்தினால், அரசு 21.02.1940-ல் கட்டாய இந்தித் திணிப்பைக் கைவிடும் முடிவுக்கு வந்தது.

தாராளமாகவும் - ஏராளமாகவும் தமிழ்ச் சொற்கள் இருந்தும், பிறமொழிச் சொற்கள் கலந்து பேசியும், எழுதியும் தமிழுக்கு ஊறு விளைத்திட முனைந்தோர், முடிந்தளவு முயன்றும், 'யாதொன்றும் புரிந்திட இயலாது', என்று முடங்கிடும் நிலையில், என்றென்றும் மாறாத இனிமைத் தமிழுக்கு ஒன்றிய அரசால் ஆபத்து வரவிருந்தபோது,

**"செந்தமிழுக்கு தீங்கொன்று வந்துற்ற பின்னும் - இத்**
**தேகம் இருந்தென்ன லாபம்?"**

என, தனக்குத் தானே கேள்வி எழுப்பிக் கொண்ட அன்னைத் தமிழின் அருந்தவப் புதல்வர்களாம் - கீழுப்பழுவூர் சின்னச்சாமி, விருகம்பாக்கம் அரங்கநாதன், கோடம்பாக்கம் சிவலிங்கம், மாயவரம் சாரங்கபாணி, விராலிமலை சண்முகம், கீரனூர் முத்து, பீளமேடு தண்டபாணி, சத்தியமங்கலம் முத்து, அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் தீக்குளித்தும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் ராஜேந்திரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோரின் தீரத்தை நினைவு கூர்ந்திடும் நாள்தான், வருகிற 25.01.2024 மொழிப் போர்த் தியாகிகள் நினைவு தினம் ஆகும்.

உலக வரலாற்றில், நாட்டின் விடுதலைக்காக, இனப் போராட்டத்திற்காக தங்களை மாய்த்துக் கொண்டோர் நிரம்ப உண்டு. ஒரு மொழிக்காக, தங்களது வாழ்க்கையையே சுருக்கிக் கொண்டு - கருகியவர்கள் உண்டு என்றால், அது தமிழ் மக்களையே சாரும்.



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் வந்த நமது கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள், 1972ஆம் ஆண்டு கோவையில், தி.மு.க. மாணவரணியின் சார்பில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றுகின்ற போது...

"மொழிக்காக - நம்முடைய இனத்திற்காகப் போராடுகிறோம். போராடுகிற நேரத்திலே நம்முடைய உயிரை இழக்கிற தியாகத்தைச் செய்வதற்குக் கூடக் காத்திருக்கிறோம். என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனவே, அந்த நான்கு ஆண்பிள்ளைகளில் ஒரு ஆண்பிள்ளை போய் விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயமாக கவலைப்பட மாட்டார். அதுவும், 'மொழிக்காக, ஒரு இனத்திற்காக தனயனை இழந்த தந்தை' -என்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டுக் கிடைக்கும். பாராட்டுகின்ற பெருமையை வாங்கித் தந்த மகிழ்ச்சி எனக்குச்சேரும் அல்லவா?"

-என்று வீர உரையாற்றி, தமிழ் மொழிக்காக தனது இன்னுயிரையும் துறப்பது எனக்குப் பெருமை உடையது என, தனது 18-வது வயதில் சபதமேற்று; இன்றும் தமிழ் மொழிக்கான அனைத்துப் போராட்டங்களிலும் தலைமகனாக விளங்குகிறார்.

'இந்தி பேசாத மக்களின் மீது இந்தியைத் திணித்தே தீருவேன்' என்று ஒன்றியத்தில் ஆட்சி நடத்தும் பாசிச பா.ஜ.க. அரசும், அதன் தலைவர்களும் அனைத்து வழிகளிலும் இந்தியைத் திணிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ்நாட்டுக்கு வந்தால், 'தொன்மையான மொழி தமிழ்' என்று நாக்கில் தேன் தடவுவதும், டெல்லிக்குச் சென்றதும் நஞ்சைப் பரப்புவதும் அவர்களுக்கு வாடிக்கையாகி விட்டது.

ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள் சமீபத்தில் நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "இந்திதான் நாட்டு மக்களை ஒன்றிணைக்கிறது - பிராந்திய மொழிகளுக்கு அதிகாரமளிக்கிறது" என்று இந்தித் திணிப்புக் கூச்சலின் மாற்று வடிவமாகப் பேசியதும், எதிர்ப்பின்றி அனைவரும் இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என தொடர்ந்து பேசுவதும் மற்ற மொழி பேசும் அனைத்து இன மக்களையும் இந்திக்குக் கொத்தடிமை ஆக்கும் எதேச்சாதிகார முயற்சிக்கு பல்வேறு இடங்களில் இருந்து கண்டனங்கள் வந்தது!

மேலும், ஒன்றிய பொதுத் துறை காப்பீட்டு நிறுவனமான "நியூ இந்தியா இன்சூரன்ஸ்" நிறுவனம், தனது ஊழியர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், "இந்தியை கட்டாயம் படிக்க வேண்டும் - இந்திப் புத்தகங்களை வாங்க வேண்டும் - இந்தி திறனறிய சோதனைகளை நடத்த வேண்டும்" என நீண்டதொரு இந்தித் திணிப்புக் கான பட்டியலை சுற்றறிக்கை என்ற பெயரில் அனுப்பியதும்,

சமீபத்தில் கோவை விமான நிலையத்தில் மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை வீரர் ஒருவர், தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண்ணிடம், இந்திதான் தேசிய மொழி, இது கூடத் தெரியாதா? என 'கூகுள்' செய்து பார்க்கச் சொல்லி வற்புறுத்தி மிரட்டிய அவல நிலையும்;

மத்திய பின்னிருப்புக் காவல் படையினருக்கான (சி.ஆர்.பி.எப்.) வேலை வாய்ப்பு அறிவிப்பில், தேர்வுகள் அனைத்தும் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டு, கழகத் தலைவர்







தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில், மொழி உரிமையைக் காக்கவும், இந்தி பேசாத மக்களை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் தி.மு.க. இளைஞர் அணியும், மாணவர் அணியும் இணைந்து அறிவித்த கண்டன ஆர்ப்பாட்டத்தைக் கண்ட ஒன்றிய அரசு, 1965 மொழிப்புரட்சிக் காலம் மீண்டும் தமிழ்நாட்டில் உருவாகி விடுமோ என அஞ்சி, இத்தேர்வை இந்தி மற்றும் ஆங்கிலம் உள்ளிட்ட 13 பிராந்திய மொழிகளில் நடத்திடவும் ஒப்புக் கொண்டது!

எப்பொதெல்லாம் இந்தித் திணிப்பு தலை தூக்குமோ - அப்பொதெல்லாம் கழகத் தலைவரின் ஆணையேற்று, தி.மு.க. மாணவர் அணியின் புலிப் போத்துகள் சீறிப் பாய்ந்திடத் தயங்கியதில்லை.

இந்தியை எப்படியாவது பின்வாசல் வழியாக திணிக்கத் துடிக்கும் ஒன்றிய அரசு ஒன்றை உணர வேண்டும்; இந்தித் திணிப்புக்கு ஆதரவு தெரிவித்து கைக் கட்டி, வாய் பொத்தி அமைதி காக்க தமிழ்நாட்டில் நடப்பது அடிமைகளின் ஆட்சி அல்ல! பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் வழியில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்தும் திராவிட மாடல் ஆட்சி!

இந்தியைத் திணிக்க முயன்றோருக்கும், முயல்வோருக்கும் அச்சத்தை உருவாக்கிவிட்டுச் சென்றுள்ள மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திட, பொதுக்கூட்டங்கள் நடத்தி அவர்கள் கொண்டிருந்த தூய தமிழுணர்வுடன் நாமும் வாழ்ந்திட வேண்டும் என்ற சூளுரையை இந்நாளில் மேற்கொண்டிட, கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் பட்டித்தொட்டி முதல் பட்டினக்கரை வரை, தி.மு.க. மாணவர் அணியின் சார்பில், கீழ்க்காணும் உரையாற்றுவோர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

**தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!**
**தமிழ்நாடு வாழ்க! திராவிட மாடல் ஆட்சி வெல்க!**

**வீரவணக்கம்! வீரவணக்கம்!**
**மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம்!**
**இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**
**ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம்!**
**தமிழை வளர்த்து தமிழரைக் காப்போம்!**

-: தமிழ்நாடு முழுவதும் உரையாற்றுவோர் பட்டியல்:

| | |
|---|---|
| அண்ணாநகர் | கழகத் தலைவர் - |
| | மாண்புமிகு **முதலமைச்சர்** அவர்கள். |
| ஆவடி | மாண்புமிகு. பொதுச் செயலாளர் |
| | **துரைமுருகன்** |
| | எஸ். ஜெகத்ரட்சகன், எம்.பி., |
| | சா.மு. நாசர், எம்.எல்.ஏ., |
| | சி. ஜெரால்டு |
| மன்னார்குடி | பொருளாளர் |
| | **டி.ஆர். பாலு, எம்.பி.,** |
| | மன்னை த. சோழராஜன் |
| திருச்சி | மாண்புமிகு. முதன்மை செயலாளர் |
| | **கே.என். நேரு** |
| | கரூர் முரளி |
| | அல்லூர் பி.எம். ஆனந்த் |
| ஆண்டிப்பட்டி | மாண்புமிகு. ஐ. பெரியசாமி |
| | நா. இராமகிருஷ்ணன், எம்.எல்.ஏ., |
| | மீனாகண் இரமேஷ் |
| காஞ்சிபுரம் | முனைவர் க. பொன்முடி |
| | க. சுந்தர், எம்.எல்.ஏ., |
| | நா.சே. பிரபாகரன் |
| நாமக்கல் | ஆ. இராசா, எம்.பி., |
| | என். ராஜேஸ்குமார், எம்.பி., |
| | கம்பம் பாண்டிதுரை |
| தென்காசி | கனிமொழி கருணாநிதி, எம்.பி., |
| | என். ஜெயபாலன் |
| | நாகை மு. சாகுல் அமீது |
| மேட்டூர் | அந்தியூர். ப. செல்வராஜ், எம்.பி., |
| | டி.எம். செல்வகணபதி |
| | நெய்வேலி தங்கம் |
| உளுந்தூர் | ஆர்.எஸ். பாரதி |
| பேட்டை | தா. உதயசூரியன், எம்.எல்.ஏ., |
| | கோமல் விஜய் அறிவழகன் |
| காஞ்சிபுரம் | மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** |
| வடக்கு மாவட்டம் | மாண்புமிகு தா.மோ. அன்பரசன் |
| கடலூர் | சி.வி.எம்.பி எழிலரசன், எம்.எல்.ஏ., |
| | மாண்புமிகு.எம்.ஆர்.கே. |
| | பன்னீர்செல்வம் |
| | வழக்கறிஞர் எஸ்.எஸ்.ஆர். சசிகுமார் |
| கும்மிடிபூண்டி | திருச்சி சிவா, எம்.பி., |
| | டி.ஜெ.எஸ். கோவிந்தராஜன், |
| | எம்.எல்.ஏ., |
| | கதிர் மீனாட்சிசுந்தரம் |
| திருவள்ளூர் | தயாநிதி மாறன், எம்.பி., |
| | திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ., |
| | புலவர் சாமிநாகப்பன் |
| இராணிப்பேட்டை | டி.கே.எஸ். இளங்கோவன் |
| | மாண்புமிகு ஆர். காந்தி |
| | ஆலங்குடி செல்வராஜ் |
| திருச்சி கிழக்கு | மாண்புமிகு. எ.வ. வேலு |
| மாநகரம் | மாண்புமிகு |
| | அன்பில் மகேஷ் பொய்யாமொழி |
| | ஒரத்தநாடு நடராஜன் |
| சேலம் | எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எம்.பி., |
| | ஆர். இராஜேந்திரன், எம்.எல்.ஏ., |
| | சேலம் இரா. தமிழரசன் |
| | ஆம்பூர் பொய்யாமொழி |
| திருவாரூர் | பொன். முத்துராமலிங்கம் |
| | பூண்டி கலைவாணன், எம்.எல்.ஏ., |
| | அ.வெ. அறவரசன் |
| தருமபுரி | மாண்புமிகு கு. பிச்சாண்டி |
| | தடங்கம் பெ. சுப்பிரமணி |
| | திருச்சி ராதாகிருஷ்ணன் |
| திருமங்கலம் | கடலூர் இள. புகழேந்தி |
| | மு. மணிமாறன் |
| | தீக்கனல் கருணாநிதி |
| சிவகங்கை | சுப. வீரபாண்டியன் |
| | மாண்புமிகு. கே.ஆர். பெரியகருப்பன் |
| | போடி கலைச்செல்வன் |
| | பூர்ணசங்கீதா சின்னமுத்து |
| புதுச்சேரி | மாண்புமிகு ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் |
| | ஆர். சிவா, எம்.எல்.ஏ., |
| | லயோலா ராஜசேகர் |

தொடர்ச்சி 6ஆம் பக்கம்

# தமிழ்நாடு முழுவதும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்கள்!

5-ஆம் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| அரியலூர் | மாண்புமிகு முனைவர் |
| | கோவி. செழியன் |
| | மாண்புமிகு |
| | எஸ்.எஸ். சிவசங்கர் |
| | சென்னை மதிவாணன் |
| வேலூர் | ப. தாயகம் கவி, எம்.எல்.ஏ., |
| | ஏ.பி. நந்தகுமார், எம்.எல்.ஏ., |
| | சிறுவனூர் பரசுராமன் |
| சங்கரன்கோயில் | எஸ். ஆஸ்டீன் |
| | ஈ. ராஜா, எம்.எல்.ஏ., |
| | குளித்தலை சலாவுதீன் |
| திண்டிவனம் | பூச்சி எஸ். முருகன் |
| | மாண்புமிகு. |
| | கே.எஸ். மஸ்தான் |
| | சென்னை உதயசூரியன் |
| பொன்னேரி | தஞ்சை கூத்தரசன் |
| | முனைவர். நா. சந்திரபாபு |
| | க. எழிலன் |
| அருப்புக்கோட்டை | க. வேங்கடபதி |
| | மாண்புமிகு |
| | கே.கே.எஸ்.எஸ்.ஆர். |
| | இராமச்சந்திரன் |
| | வழக்கறிஞர் அ. கணேசன் |
| ஈரோடு | குத்தாலம் பி. கல்யாணம் |
| | மாண்புமிகு. சு. முத்துசாமி |
| | தூத்துக்குடி தமிழ்ப்பிரியன் |
| | ஜெ. வீரமணி |
| கள்ளக்குறிச்சி | தி.அ. முகமது சகி |
| | வசந்தம் கார்த்திகேயன், |
| | எம்.எல்.ஏ., |
| | இளந்தளிர் இளங்கோ |
| மதுரை | வழக்கறிஞர் |
| | இரா. கிரிராஜன், எம்.பி., |
| | கோ. தளபதி, எம்.எல்.ஏ., |
| | சேலம் ஜான்பாட்ஷா |
| | அதலை பி. செந்தில்குமார் |
| காரைக்குடி | பொள்ளாச்சி மா. உமாபதி |
| | ஆத்தூர் வெங்கடேசன் |
| திருப்பூர் | கம்பம் செல்வேந்திரன் |
| | க. செல்வராஜ், எம்.எல்.ஏ., |
| | கோவை. அ. திராவிடமணி |
| நாகப்பட்டினம் | திண்டுக்கல் ஐ. லியோனி |
| | என். கௌதமன் |
| | குடியாத்தம் புவியரசி |
| திருப்பத்தூர் | முனைவர் சபாபதி மோகன் |
| (வேலூர்) | உடுமலை தண்டபாணி |
| இராமநாதபுரம் | கவிச்சுடர் கவிதைப் பித்தன் |
| | காதர்பாட்ஷா முத்து |
| | ராமலிங்கம், எம்.எல்.ஏ., |
| | ஆக்காட்டி ஆறுமுகம் |
| விழுப்புரம் | வாகை சந்திரசேகர் |
| | நா. புகழேந்தி, எம்.எல்.ஏ., |
| | அன்னவயல் கணேசன் |
| கோயம்புத்தூர் | மாண்புமிகு முனைவர் |
| | பி.டி.ஆர். பழனிவேல் |
| | தியாகராஜன் |
| | நா. கார்த்திக் |
| | தா. ஆதித்தன் |
| | வி.ஜி. கோகுல் |
| விருதுநகர் | முனைவர் தமிழச்சி |
| | தங்கபாண்டியன், எம்.பி., |
| | மாண்புமிகு தங்கம் |
| | தென்னரசு |
| | மதுரை சாதுராஜன் |
| மயிலாடுதுறை | புதுக்கோட்டை விஜயா |
| | நிவேதாமுருகன்எம்.எல்.ஏ., |
| | சித்திரைகுடிபாலகிருஷ்ணன் |
| வந்தவாசி | மருத்துவர். நா. எழிலன், |
| | எம்.எல்.ஏ., |
| | ரஷித்கான் |
| புதுக்கோட்டை | பேராசிரியர் |
| | கான்ஸ்டன்டைன் |
| | இரவீந்திரன் |
| | மாண்புமிகு. எஸ். இரகுபதி |
| | மருத்துவர் கலைக்கதிரவன் |
| கரூர் | வி.பி. ராஜன் |
| | செந்தாமரை கண்ணன் |
| மதுராந்தகம் | அன்னியூர் சிவா |

| | |
|---|---|
| | மங்கலம் பிரபாகரன் |
| கோபிசெட்டி | டி.எம். கதிர் ஆனந்த், எம்.பி., |
| பாளையம் | என். நல்லசிவம் |
| | பாலக்கரை டி. கோவிந்தன் |
| செய்யாறு | நெல்லிகுப்பம் புகழேந்தி |
| | திருச்சி சேகர் |
| பெரம்பலூர் | குத்தாலம் க. அன்பழகன் |
| | குன்னம் இராஜேந்திரன் |
| | கு. மொழிமாறன் |
| உடுமலைப் | எம்.எம். அப்துல்லா, எம்.பி., |
| பேட்டை | முரசொலி மூர்த்தி |
| திருவண்ணா | கவிஞர் ஈரோடு இறைவன் |
| மலை | மயிலாடுதுறை அருள்தாஸ் |
| நெல்லை | ஏ.கே.எஸ். விஜயன் |
| | டி.பி.எம். மைதீன்கான் |
| | தரமணி ஜெகதீசன் |
| திண்டுக்கல் | தமிழன் பிரசன்னா |
| | ஐ.பி. செந்தில்குமார்எம்.எல்.ஏ., |
| | செந்தூர் பாலகிருஷ்ணன் |
| ஆரணி | வழக்கறிஞர். இ. பரந்தாமன் |
| | எம்.எஸ். தரணிவேந்தன் |
| | தி.நகர் ச. சண்முகநாதன் |
| விருத்தாசலம் | சூர்யா வெற்றிக்கொண்டான் |
| | மாண்புமிகு. |
| | சி.வி. கணேசன் |
| | டாக்டர் அபிபுல்லா |
| சிவகாசி | வழக்கறிஞர் அ. சரவணன் |
| | தமிழ் சாதிக் |
| மணப்பாறை | கவிஞர் காசிமுத்து |
| | மாணிக்கம் |
| | சன்.கோ. ஆறுமுகம் |
| இடங்கணசாலை | வி.பி. கலைராஜன் |
| | ஈரோடு சத்தியாவதி |
| ஒட்டன்சத்திரம் | எஸ்.கே.பி. கருணாநிதி |
| | மாண்புமிகு |
| | அர. சக்கரபாணி |
| | ஆம்பூர் தருமன் |
| | கா. பொன்ராஜ் |
| கோவில்பட்டி | இரா. ராஜீவ்காந்தி |
| | மாண்புமிகு கீதா ஜீவன் |
| | முஜ்பூர் ரகுமான் |
| குளித்தலை | ச. தங்கவேல் |
| | பா.கோ. குமார் |
| திருமயம் | கவிஞர் தமிழ்தாசன் |
| | தமிழ்கொண்டான் |
| வேதாரண்யம் | பி.டி. அரசகுமார் |
| | ஏர்போர்ட் பொன்னுசாமி |
| தாராபுரம் | டாக்டர் விஜய் |
| | செங்கல்பட்டு சீனுவாசன் |
| தஞ்சாவூர் | கவிஞர் ஆண்டாள் |
| | பிரியதர்ஷினி |
| | எஸ். துரைசந்திரசேகர், |
| | எம்.எல்.ஏ., |
| | கு. வாஞ்சிநாதன் |
| பாலக்கோடு | பெருநற்கிள்ளி |
| | பி. பழனியப்பன் |
| | தமிழன்பன் |
| செஞ்சி | சித்திரமுகி |
| | சத்தியவாணிமுத்து |
| | உடுமலை தாரை சிவா |
| காங்கேயம் | வி.சி. சந்திரகுமார் |
| | இல. பத்மநாபன் |
| | குமரி பிரபாகரன் |
| நாகர்கோயில் | நந்தனம் நம்பிராஜன் |
| | மேயர் ஆர். மகேஷ் |
| | நெல்லை மணி |
| கிருஷ்ணராயபுரம் | அர. திராவிடம் |
| | கோட்டூர் முருகன் |
| பெருந்துறை | செந்தலை கவுதமன் |
| | ஆற்காடு அகிலன் |
| காரைக்கால் | கோவி. லெனின் |
| | எச். நாஜீம் |
| | பாரதி மோகன் |
| சோளிங்கர் | விஜயா தாயன்பன் |
| | ஆத்தூர் சபரி |
| தொண்டாமுத்தூர் | டாக்டர் கனிமொழி |
| | என்.வி.என். சோமு |
| | என். இரவி |
| | கோபி. குமணன் |

| | |
|---|---|
| ஊட்டி | தமிழ் கா. அமுதரசன் |
| | பா.மு. முபாரக் |
| | காவேரிப்பட்டினம் |
| | இளையராஜா |
| போடி | சைதை சாதிக் |
| | துறையூர் பாஸ்கரன் |
| கிருஷ்ணகிரி | முனைவர்பொன்னேரிசிவா |
| | தே. மதியழகன், எம்.எல்.ஏ., |
| | விஷார் தமிழரசன் |
| மானாமதுரை | கவிஞர் சல்மா |
| | வழக்கறிஞர் மணிமுடி |
| கீழ்பென்னாத்தூர் | சென்னை அரங்கநாதன் |
| | கலைச்செல்வி ஜெகநாதன் |
| திருத்துறைப்பூண்டி | சோம. செந்தமிழ்செல்வன் |
| | கொரஞ்சூர் முனுசாமி |
| பர்கூர் | போடி. காமராஜ் |
| | வெ. அன்புவாணன் |
| பவானி | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| | பவித்திரம் கண்ணன் |
| மேட்டுப்பாளையம் | வேலூர் கென்னடி |
| | தருமபுரி அதியமான் |
| அறந்தாங்கி | ஆரூர் மணிவண்ணன் |
| | வண்ணை புகாரி |
| சிதம்பரம் | ஆடுதுறை உத்திராபதி |
| | கா.வி. நெடுஞ்செழியன் |
| திருப்போரூர் | மனுஷ்யபுத்திரன் |
| | திருவெற்றியூர் கருணாநிதி |
| மேலூர் | தூத்துக்குடி சரத்பாலா |
| | மாண்புமிகு. பி. மூர்த்தி |
| | ஈரோடு இளையகோபால் |
| இராஜபாளையம் | ஆவடி பாஸ்கர் |
| | எம்.எல். நாதன் |
| கம்பம் | வேலூர் இரமேஷ் |
| | தாம்பரம் ஜின்னா |
| சீர்காழி | மன்னை சோம. |
| | இளங்கோவன் |
| | கரூர் மதி |
| திருச்செங்கோடு | திருப்பூர் மனோகர்பாபு |
| | குன்னூர் கலீம் |
| கலசப்பாக்கம் | நாத்திகம் நாகராஜன் |
| | எழும்பூர் கோபி |
| விராலிமலை | ஆலந்தூர் ஒப்பிலாமணி |
| | வஹிதா பேகம் |
| தேனி | வரகூர் காமராஜ் |
| | தங்க தமிழ்செல்வன் |
| | கனல் சுப்பிரமணி |
| பல்லடம் | ஜோன்ஸ் ரூசோ |
| | போர்முரசு கதிரவன் |
| பொள்ளாச்சி | வயலூர் கிருஷ்ணமூர்த்தி |
| | தளபதி முருகேசன் |
| | குடந்தை ராமகிருஷ்ணன் |
| குன்னூர் | கவிஞர் சிவமுத்துவளவன் |
| | வா.சு. முத்துசாமி |
| பேராவூரணி | திருப்பூர் ரஜினி செந்தில் |
| | தீக்கனல் தியாகு |
| ஜெயங்கொண்டம் | சிங்கை பிரபாகரன் |
| | மதுரை சேவியர் |
| பட்டுக்கோட்டை | வே. மதிமாறன் |
| | க.அண்ணாதுரை, |
| | எம்.எல்.ஏ., |
| | வீர. வெள்ளைச்சாமி |
| நிலக்கோட்டை | ஆலந்தூர் மலர்மன்னன் |
| | கடையநல்லூர் இஸ்மாயில் |
| விக்கிரவாண்டி | கோவை சம்பத் |
| | புலவர் பெரியாழ்வார் |
| பெரியகுளம் | ஜஸ்டீன் வில்பர்ட் |
| | கோவை இக்பால் |
| திருச்சுழி | உடன்குடி தனபால் |
| | செங்குன்றம் திராவிடமணி |
| மொடக்குறிச்சி | கோதை மதிவாணன் |
| | போலீஸ் ஆல்பிரட்தாஸ் |
| நெய்வேலி | உ. மதிவாணன் |
| | எஸ்.கே. ஸ்ரீராம் |
| சின்னசேலம் | பிரம்மபுரம் பழனி |
| | ஆவடி கா.மு. ஜான் |
| நன்னிலம் | தஞ்சை காமராஜ் |
| | வேங்கை சந்திரசேகர் |

| | |
|---|---|
| செங்கம் | பவானி கண்ணன் |
| | செங்கை சந்தானம் |
| சேந்தமங்கலம் | திப்பம்பட்டி ஆறுச்சாமி |
| | எம்.பி. ஆலன் |
| வாணியம்பாடி | சேப்பாக்கம் பிரபாகரன் |
| | குன்னூர் ஜாகீர் உசேன் |
| குடியாத்தம் | வழக்கறிஞர். சிவ. ஜெயராஜ் |
| | கோவை சௌந்தர் |
| திட்டக்குடி | தஞ்சை கலைமணிபாரதி |
| | பேர்ணாம்பட்டு இராஜேந்திர |
| | பிரசாத் |
| ஓமலூர் | பசும்பொன் இரவிசந்திரன் |
| | கே.இ. செந்தமிழ் அரசு |
| கும்பகோணம் | சேலம் சுஜாதா |
| | சு. கல்யாணசுந்தரம், |
| | எம்.பி., |
| | நாமக்கல் இராஜகோபால் |
| வேடசந்தூர் | மதுரை ஜவகர் |
| | புத்தூர் ஆனந்தன் |
| பூம்புகார் | நளினி சாரங்கன் |
| | எசனை ஆறுமுகம் |
| அரூர் | ஆரணி மாலா |
| | கவிஞர் வீரமுரசு |
| குமாரபாளையம் | பொள்ளாச்சி சித்திக் |
| | எழும்பூர் தேவநிதி |
| பாப்பிரெட்டிபட்டி | ஓசூர் அப்துல் ரஹ்மான் பாரி |
| | கோவை சேரலாதன் |
| திருப்பத்தூர் | தக்கோலம் தேவபாலன் |
| (சிவகங்கை) | வண்ணை மோகன் |
| இராசிபுரம் | கந்திலி கரிகாலன் |
| | ஆவடி அமுதநேசன் |
| அரவக்குறிச்சி | திருப்பூர் கூத்தரசன் |
| | ரம்ஜான் பேகம் |
| ஒசூர் | குடியாத்தம் பெரிய |
| | கோட்டீஸ்வரன் |
| | ஒய். பிரகாஷ், எம்.எல்.ஏ., |
| | மதுரை குருசாமி |
| பரமக்குடி | இடிமுரசு மணிமுத்து |
| | நெல்லை மூர்த்தி |
| கமுதி | வழக்கறிஞர் |
| | முத்து முத்தையா |
| | நன்னிலம் சந்திரசேகர் |
| ரிஷிவந்தியம் | நெல்லை ரவி |
| | குடியாத்தம் அன்பு |
| ஆலங்குடி | குடியாத்தம் பாரி |
| | கே.வி. ராமகிருஷ்ணன் |
| போளூர் | செங்கை தாமஸ் |
| | காரை கு. அருளானந்தம் |
| வாழப்பாடி | மதுரை அலெக்சாண்டர் |
| | எஸ்.ஆர். சிவலிங்கம் |
| | துறையூர் துரைப்பாண்டி |
| பண்ருட்டி | நாகம்மை கருப்பையா |
| | முகவை ராமர் |
| ஆம்பூர் | கவிஞர் நன்மாறன் |
| | ஈகை தனசேகரன் |
| ஊத்தங்கரை | சேலம் கோவிந்தன் |
| | சைதை பாஸ்கர் |
| நத்தம் | அதிரடி அல்தாப் |
| | பெரம்பலூர் விஜயரத்தினம் |
| மார்த்தாண்டம் | நெல்லை முத்தையா |
| | மாண்புமிகு |
| | மனோ. தங்கராஜ் |
| | சிவகாசி ஜீவா |
| அம்பாசமுத்திரம் | கம்பம் பாண்டியன் |
| | இரா. ஆவுடையப்பன் |
| | சி.பி. சிங்காரவேல் |
| சாத்தான்குளம் | வண்ணை அரங்கநாதன் |
| | மாண்புமிகு அனிதா |
| | ராதாகிருஷ்ணன் |
| | முருக்கம் முனுசாமி |
| சாத்தூர் | மார்ஷல் முருகன் |
| | தா. பழூர் இளஞ்செழியன் |
| வேப்பனஹள்ளி | பூங்கா நகர் ஜெ. கண்ணன் |
| | தீக்கனல் செல்வம் |
| சூலூர் | மதுரை சுந்தரராஜன் |
| | ஆசிரியர் அன்புமணி |

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள் – 13.01.2024

**சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ.**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

## தந்தை பெரியார் விருது – பேராசிரியர் சுப.வீரபாண்டியன்! டாக்டர் அம்பேத்கர் விருது – பி.சண்முகம்!

# 2023-ஆம் ஆண்டு - சமூக நீதிக்கான விருதுகள்! தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

## விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.14–

**2023ஆம் ஆண்டிற்கான சமூகநீதிக்கான “தந்தை பெரியார் விருது”க்கு பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களும், “டாக்டர் அம்பேத்கர் விருது”க்கு பி.சண்முகம் அவர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்தது. இவ்விருதுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.1.2024) மாலை வழங்கி சிறப்பித்தார்.**

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:–

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும், சமூக நீதிக்காகப் பாடுபடுபவர்களைச் சிறப்பு செய்யும் வகையில், சமூக நீதிக்கான “தந்தை பெரியார் விருதினை” வழங்கி கௌரவித்து வருகிறது. அந்தவகையில், 2023ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான “தந்தை பெரியார் விருது”க்கு சமூக நீதி கண்காணிப்புக் குழுத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டு வரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் “டாக்டர் அம்பேத்கர் விருது” வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், 2023ஆம் ஆண்டிற்கான “டாக்டர் அம்பேத்கர் விருது”க்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பி.சண்முகம் அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

விருதாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று விருதுகளை வழங்கி சிறப்பித்தார். விருது பெற்ற விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக ஐந்து இலட்சம் ரூபாயுடன், தங்கப் பதக்கம் மற்றும் தகுதியுரையும் வழங்கப்பட்டன.

### பேராசிரியர் சுப. வீரபாண்டியன்


(தந்தை பெரியார் விருது) பேராசிரியர் சுப.வீரபாண்டியன்
(டாக்டர் அம்பேத்கர் விருது) பி.சண்முகம்

சமூகநீதிக்கான “தந்தை பெரியார் விருது” பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ள சுப.வீரபாண்டியன் அவர்கள், திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவர், தந்தை பெரியாரின் பற்றாளர். தமிழ்நாடு அரசு அமைத்துள்ள சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் தலைவராகச் செயலாற்றி வருகிறார். அவர் ஆரியத்தால் வீழ்ந்தோம், திராவிடத்தால் எழுந்தோம், தமிழியத்தால் வெல்வோம் என்னும் முழக்கத்தை முன்வைத்து, 2007–ஆம் ஆண்டு, திராவிட இயக்கத் தமிழர் பேரவை என்னும் இயக்கத்தை நிறுவியவர். தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்ற அவர், கல்லூரியில் பணியாற்றும் பொழுதே தமிழ் தமிழர் இயக்கம் என்னும் அமைப்பை உருவாக்கிச் செயல்பட்டவர்.

தந்தை பெரியாரின் கொள்கைகளான சமூக நீதி, சாதி ஒழிப்பு, ஆதிக்க எதிர்ப்பு, தாய்மொழிப் பற்று, பெண் விடுதலை மற்றும் பகுத்தறிவு முதலான கருத்துகளை உறுதியுடன் செயல்படுத்த வேண்டும் என்பதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார். சுப. வீரபாண்டியன் அவர்கள் கலைமாமணி விருது பெற்றுள்ளதுடன், இதுவரை 54 நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

### பி.சண்முகம்

“டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது” பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ள பி.சண்முகம் அவர்கள், தமிழ்நாட்டில் 32 ஆண்டுகாலமாக மலைவாழ் மக்கள் சங்கத்தின் தலைவராக பணி வகித்து மலைவாழ் மக்களின் நலனுக்காக பாடுபட்டுள்ளார். மேலும், தருமபுரி மாவட்டம், வாச்சாத்தி கிராமத்தில் மலைவாழ் மக்கள் மற்றும் பெண்களுக்கு ஏற்பட்ட வன்கொடுமைகளுக்கு எதிராக பெரும் போராட்டங்களை நடத்தி நீதி பெற்று தந்ததில் பெரும் பங்காற்றியுள்ளார்.

வாச்சாத்தி உண்மையின் போர்க்குரல், வாச்சாத்தி வன்கொடுமை போராட்டம் – வழக்கு தீர்ப்பு, தீக்கதிர் நாளிதழில் வனமக்கள் வாழ்க்கை வளம் பெற, வனங்களை பாதுகாப்பது மக்களே போன்ற செய்தி தொகுப்புகளையும் சண்முகம் அவர்கள் எழுதியுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## 2024 ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது - தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள்! தமிழ்நாடு அரசு சார்பில் 2023 ஆம் ஆண்டுக்கான

# தமிழ்மொழி - பண்பாட்டு வளர்ச்சிக்கு தொண்டாற்றிய அறிஞர்கள் பெயரில் விருதுகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜன.14–

**2024ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது தவத்திரு பாலமுருகனடிமை சுவாமி அவர்களுக்கும், 2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருது பத்தமடை பரமசிவம் அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது உ.பலராமன் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது கவிஞர் பழநிபாரதி அவர்களுக்கும் பாவேந்தர் பாரதிதாசன் விருது எழுச்சிக் கவிஞர் முத்தரசு அவர்களுக்கும் தமிழ்த்தென்றல் திரு.வி.க.விருது ஜெயசீல ஸ்டீபன் அவர்களுக்கும் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் இரா.கருணாநிதி அவர்களுக்கும் வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**


(திருவள்ளுவர் விருது) தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகள்
(பேரறிஞர் அண்ணா விருது) பத்தமடை பரமசிவம்
(பெருந்தலைவர் காமராசர் விருது) உ.பலராமன்
(மகாகவி பாரதியார் விருது) கவிஞர் பழநிபாரதி
(பாவேந்தர் பாரதிதாசன் விருது) எழுச்சிக் கவிஞர் முத்தரசு
(தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது) ஜெயசீல ஸ்டீபன்
(முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது) முனைவர் இரா.கருணாநிதி

இதுகுறித்து முதல்வர் அவர்களின் உத்தரவு வருமாறு :-

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்குத் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் திருத்தொண்டர்களுக்குத் தமிழால் விளங்கிடும் தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புக்களையும் அளித்து, அவர்தம் தமிழ்த்தொண்டுக்குப் பெருமை சேர்த்து வருகிறது.

### திருவள்ளுவர் விருது - பாலமுருகனடிமை சுவாமிகள்

அவ்வகையில், பள்ளி மாணவர்களுக்கு 1983ஆம் ஆண்டிலிருந்து திருக்குறள் ஒப்புவித்தல், கட்டுரை, பேச்சு போட்டிகள் நடத்தி வெற்றி பெறும் மாணவச் செல்வங்களுக்கு விழா எடுத்து ரூபாய் 3 லட்சம் பரிசு வழங்கியும் உலகத் திருக்குறள் மாநாடு மாநில அளவில் இரு முறை நடத்தி தமிழ்த் தொண்டாற்றி வரும் தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகளுக்கு 2024ஆம் ஆண்டுக்கான அய்யன் திருவள்ளுவர் விருதினை வழங்குகிறது.

### பேரறிஞர் அண்ணா விருது - பத்தமடை பரமசிவம்!

பேரறிஞர் அண்ணா அவர்களின் முதன்மைத் தொண்டர் என பாராட்டப்பட்டவரும் 18 வயது முதல் திராவிட இயக்கத்தில் ஈடுபட்டு பல்வேறு போராட்டங்களில் பங்கு கொண்டு சிறை சென்றவருமான பத்தமடை பரமசிவம் அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருதினை வழங்குகிறது.

### பெருந்தலைவர் காமராசர் விருது - உ.பலராமன்!

தேசியத் தமிழ்க் கவிஞர் பேராயம், சிலப்புச் செல்வர் ம.பொ.சி அவர்களைக் கொண்டு இளங்கோ இலக்கிய மன்றம் ஆகிய அமைப்புகளைத் தொடங்கியவரும் காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளரும் மேனாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. உ. பலராமன் அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான பெருந்தலைவர் காமராசர் விருதினை வழங்குகிறது.

### மகாகவி பாரதியார் விருது - கவிஞர் பழனிபாரதி!

மேலும், தமிழ்நாடு அரசின் முதன்மையான பல்கலைக்கழகங்கள் கேரள மாநில அரசின் பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பாடத்திட்டத்தில் இடம் பெறும் அளவிற்கு கவிதைகளைப் படைத்த கவிஞர் பழனி பாரதி அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான மகாகவி பாரதியார் விருதினை வழங்குகிறது.

### பாவேந்தர் பாரதிதாசன் விருது - எழுச்சிக் கவிஞர் ம.முத்தரசு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முத்தரசனாரின் “கற்கண்டு கவிதை கேட்டு கழிப்பேறுவகை கொண்டேன்” என்று பாராட்டைப் பெற்றவரும் தமது 92ஆவது அகவையிலும் தனித்தமிழ் வேட்கை அகலாமல் அருந்தமிழ்ப்பணியாற்றி வரும் எழுச்சிக் கவிஞர் ம. முத்தரசு அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான பாவேந்தர் பாரதிதாசன் விருதினை வழங்குகிறது.

### தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது - பேராசிரியர் எஸ்.ஜெயசீல ஸ்டீபன்!

பல்வேறு நாடுகளின் ஆவணக் காப்பகங்களில் தகவல்களைத் திரட்டி வரலாற்று நூல்களை எழுதியவரும் சோழ மண்டல கடற்கரையை முழுமையாக ஆய்வு செய்தவருமான பேராசிரியர் எஸ். ஜெயசீலஸ்டீபன் அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான தமிழ்த் தென்றல் திரு. வி. க. விருதினை வழங்குகிறது.

### முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது - முனைவர் இரா.கருணாநிதி!

தமிழ் இலக்கணத்தை மாணவர்கள் எளிமையாக கற்கும் வகையில் பாடல்களாக யாத்தளித்த முனைவர் இரா. கருணாநிதி அவர்களுக்கு 2023ஆம் ஆண்டுக்கான முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருதினை வழங்குகிறது.

### ரூபாய் 2 இலட்சம் - தங்கப்பதக்கம்!

விருது பெறும் விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப் பெறுவார்கள்.

இவ்விருதுகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் நேற்று மாலை வழங்கினார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பங்கேற்ற ஊடக பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்து கலந்து கொண்டார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், மண்டல தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் பாச பிரபு மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில், ‘சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு” கழுதூர் வெங்கடேஸ்வரா கல்லூரி அரங்கத்தில், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையில் நடைபெற்றது.சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ., முன்னிலை வகித்தார். தலைமைக் கழக பார்வையாளர் முன்னாள் எம்.எல்.ஏ., செந்தமிழ்ச்செல்வன், மாவட்டப் பொருளாளர் ஜி.தண்டபாணி, தலைமைச் செயற்குழு வி.கே.வெங்கட்ராமன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.கணேஷ்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க.வெங்கடேசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜி.எஸ்.ஆனந்த், இளைஞரணி துணை அமைப்பாளர் துரைராஜ் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், கழக இளைஞரணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில், 48 வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நேற்று முன்தினம் (12.1.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் ஐ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், அரசு முதன்மைச் செயலாளர்/சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர்–மேலாண்மை இயக்குநர் திருமதி. காகர்லா உஷா, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2024" விழாவில் நேற்று முன்தினம் (12.01.2024) தமிழ் வளர்ச்சி துறை சார்பில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் இலக்கியம், இலக்கணம், மொழியியல் ஆகிய பிரிவுகளில் கனடா பாலசுந்தரம் இளையதம்பி, மலேசியா மனோன்மணி தேவி, கொரியாஆரோக்கியராஜ், சிங்கப்பூர் மா.அன்பழகன், கனடா சு. தீனதயாளன், வேல்ஸ் மதன் எஸ். ராஜா ஆகியோருக்கு உலகத் தமிழ்ச் சங்க விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான்,தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில்,

# 48-வது இந்திய சுற்றுலா - பொருட்காட்சி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன.14-

சென்னை, தீவுத்திடல், அறிஞர் அண்ணா கலையரங்கில், 48-வது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியின் தொடக்க விழா, தீவுத்திடல் அறிஞர் அண்ணா கலையரங்கில் நேற்று முன்தினம் (12.01.2024) சிறப்புடன் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 48-வது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியை தொடங்கி வைத்தார். மேலும் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கங்களை பார்வையிட்டார்.

48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி 2023-2024-ஐ யொட்டி, "சுற்றுலா மற்றும் பசுமை முதலீடுகள்" என்ற இந்தாண்டிற்கான கருப்பொருளை மையமாக கொண்டு அரங்கங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, நான் முதல்வன் திட்டம், காவல்துறை, பொதுப்பணித்துறை, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை, தொழில், முதலீடு மற்றும் வர்த்தகத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, பள்ளி கல்வித்துறை, உயர் கல்வித்துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறை, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பட்டு வளர்ச்சித்துறை, சமூக நலத் துறை, சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, சி.எம்.டி.எ, ஆவின், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை மாநகராட்சி உள்பட தமிழ்நாடு அரசுத் துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் அரங்கங்கள் 49, ஒன்றிய அரசு நிறுவனங்களின் 2 அரங்கங்கள், என மொத்தம் 51 அரங்கங்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்து சமய அறநிலையத்துறை அரங்கில் சென்னை மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள பிரசித்திப்பெற்ற திருக்கோயில்களிலிருந்து பிரசாதங்கள் வருவிக்கப்பட்டு. பொருட்காட்சிக்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு தினந்தோறும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரங்கில் முழு உடல் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்த பரிசோதனை, இதய வரைவலை பரிசோதனைகள் உள்பட பல்வேறு மருத்துவ ஆலோசனைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ரிசர்வ் வங்கி அரங்கில் பழைய கிழிந்த ரூபாய் நோட்டுகள் மாற்றி புதிய ரூபாய் நோட்டுகள் வழங்கவும், சில்லரை நாணயங்கள் மற்றும் புதிய ரூபாய் நோட்டுகள் வழங்கப்பட உள்ளன.

இவை தவிர தனியார் கடைகள், அரங்கங்கள் அமைக்கப்பட்டு பொருட்காட்சி நடைபெறுவதன் மூலம் நேரடியாக சுமார் 5,000 பேரும், மறைமுகமாக சுமார் 30,000 நபர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கியுள்ளது.

80,000 சதுர அடி பரப்பளவில் பொழுதுபோக்கு வளாகம் அமைந்துள்ளது. பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வசதிக்காக சென்னை நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து அரசுப் பேருந்துகள் கூடுதலாக சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 12.00 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் கண்டுகளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

48-வது இந்திய சுற்றுலா மற்றும் பொருட்காட்சியினை தொடங்கி வைத்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:-

48-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இங்கு வந்ததில் எனக்கு பழைய நினைவுகள் வருகின்றன. நான் பள்ளியில் படிக்கும்போது, 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு எப்போதெல்லாம் சுற்றுலா பொருட்காட்சி நடைபெறுமோ அப்போதெல்லாம், என்னுடைய சகோதரிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த குடும்பத்தாருடன் பல முறை வந்து இந்த பொருட்காட்சியை சுற்றிப் பார்த்துவிட்டு செல்வது வழக்கம். இப்போது அதே பொருட்காட்சியை திறந்து வைப்பதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பது பெருமையாக உள்ளது.

நான் பொறுப்பு வகிக்கக்கூடிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் அரங்கும் இந்த பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருப்பது கூடுதல் மகிழ்ச்சியாகும். என்னுடைய துறையின் சார்பில் எடுக்கப்பட்டிருக்கக் கூடிய பல்வேறு பணிகள், நிகழ்ச்சிகள், பல்வேறு முன்னெடுப்புகள் குறித்த விளக்கங்கள் அந்த அரங்கத்திலே அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்துத் துறைகளின் சார்பில் இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன, என்னென்ன திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்று ஒவ்வொரு அரங்கத்திலேயும் சிறப்பாக விளக்கங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், பத்திரிக்கை நண்பர்களெல்லாம், கண்காட்சி அரங்கங்களை பார்வையிட்டு அனைத்து பொதுமக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு பொருட்காட்சியை திறக்கின்ற வாய்ப்பு கிடைத்தும் என்னால் வரமுடிய வில்லை. அடுத்த 70 நாட்கள் இந்த பொருட்காட்சி நடைபெற இருக்கின்றது. எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த பொருட்காட்சியை பார்வையிட்டு, அரசு திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு, பொருட்காட்சியின் நோக்கத்தை வெற்றியாக்கி காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் ஐ. பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ்குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், முதன்மைச் செயலாளர்/சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர்/ மேலாண்மை இயக்குநர், திருமதி. காகர்லா உஷா, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளின் வயல்களிலிருந்து பெறப்பட்ட

# காய் - கனிகள் "நம்ம சென்னை நம்ம சந்தை" மூலம் விற்பனை!

## தோட்டக் கலைத்துறை அறிவிப்பு !

சென்னை, ஜன.14-

விவசாயிகள் வயல்களிலிருந்து பெறப்பட்ட காய்கனிகள் 24 மணி நேரத்திற்குள் சென்னையில் 'ப்ரஸ்' ஆக கிடைத்திடும் வகையில் வேளாண்மைத் துறையின் தோட்டக்கலை 'நம்ம சென்னை நம்ம சந்தை' என்ற பெயரில் அறிமுகம் செய்யப்பட்டது.

இதுகுறித்து தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

விவசாயிகளின் வயல்களில் இருந்து காய்கறிகளை நேரடியாக பெற்று அதனை சுவைக்க நம்ம சென்னை மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. குறிப்பிட்ட காலகட்டத்தில் குறிப்பிட்ட மாவட்டத்தில் விளையக் கூடிய காய்கறிகளை 24 மணி நேரத்தில் விவசாயிகளின் வயல்களிலிருந்து பெறப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. வாரந்தோறும் சென்னை செம்மொழிப் பூங்காவில் இரண்டு நாட்கள் (வெள்ளி மற்றும் சனி காலை வேளைகளில் மட்டும்) பாரம்பரிய காய்கறிகள், கீரைகள், கிழங்குகள், பழங்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் ஆகியன செம்மொழிப் பூங்காவில் உள்ள டான்ஹோடா விற்பனை மையத்தில் விற்பனை செய்திட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் துணிப்பை (மஞ்சப்பை) கொண்டு வந்து வாங்குவோருக்கு 5% சலுகை வழங்கப்படும்.

பாரம்பரிய காய்கறிகளின் பட்டியல்:

கறிவேப்பிலை செங்காம்பு, வெள்ளை பாகல் (கோவை)

பழு பாகல், மஞ்சள் பூசணி, சக்கரைவள்ளி கிழங்கு (இளஞ்சிவப்பு நிறம்) (திண்டுக்கல்)

மலைப்பூண்டு (கொடைக்கானல்)

காந்தாரி மிளகாய் (கன்னியாகுமரி)

எறையூர் சேப்பங்கிழங்கு, உளுந்தூர்பேட்டை கருணை கிழங்கு (கள்ளக் குறிச்சி)

கண்ணாடி கத்தரி (நாமக்கல்)

ஊர் அவரை (சேலம்)

புளியங்குடி எலுமிச்சை, வெள்ளைக்கத்தரி பாவூர்சத்திரம்

வெண்டை, (தென்காசி)

சிறுகிழங்கு (திருநெல்வேலி)

இலவம்பாடி முள் கத்தரி (வேலூர்)

கோவைக்காய் (விழுப்புரம்)

அதலக்காய், சாத்தூர் வெள்ளரி (விருதுநகர்)

மூக்குத்தி அவரை, சிறகு அவரை, பூனைக்காலி அவரை (திருப்பூர்)

இதர காய்கறிகளின் பட்டியல்:

கீரைகள் (வெந்தயகீரை, சிறுகீரை, அரைகீரை, பருப்பு, கீரை, பாலக்கீரை, மணத்தக்காளி கீரை) வேலூர் மாவட்டத்திலிருந்து

கறிபலா (கன்னியாகுமரி)

கிருஷ்ணகிரியில் இருந்து கொடைமிளகாய் (சிவப்பு, மஞ்சள், பச்சை)

சின்ன வெங்காயம் (பெரம்பலூர்)

புரோக்கோலி (பச்சைப் பூக்கோசு), சிவப்பு முட்டைக் கோசு, பேபி உருளைக் கிழங்கு, முள்ளங்கி (நீலகிரி)

ராணிப்பேட்டையிலிருந்து வாழைக்காய்

மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் பட்டியல்:

பனங்கற்கண்டு (தூத்துக்குடி)

பனங்கிழங்கு (ராமநாதபுரம்)

மஞ்சள் கொத்துகள் (ஈரோடு)

தேங்காய் பூ (தருமபுரி)

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### 'கேலோ இந்தியா' – "சவால்களை ஏற்பது தமிழக அரசுக்குப் புதிதல்ல"

# சர்வதேச விளையாட்டு உலகம் நம்மை திரும்பிப் பார்க்கும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் நம்பிக்கை!

சென்னை, ஜன. 14-

'கேலோ இந்தியா' விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாடு அரசு நடத்த உள்ளதை தொடர்ந்து 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் சர்வதேச விளையாட்டு உலகம் நம்மை திரும்பி பார்க்கும் எனவும் சவால்களை ஏற்பது தமிழக அரசுக்கு புதிதல்ல என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

ஒன்றிய அரசின் திட்டத்தின்கீழ் "கேலோ இந்தியா" விளையாட்டு போட்டிகள் கடந்த 2018ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில், 17 வயதிற்கு உட்பட்டவர்கள் மற்றும் 21 வயதிற்கு உட்பட்டவர்கள் என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. கோவிட்19 பெருந்தொற்று காரணமாக கடந்த 2020ம் ஆண்டு இப்போட்டிகள் நடத்தப்படாத நிலையில், கடந்த 2021ம் ஆண்டில் 18 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான பிரிவில் ஹரியானா மாநிலம், பஞ்சகுலாவிலும், 2022ம் ஆண்டில் மத்திய பிரதேச மாநிலம் போபால் நகரிலும் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.



தினகரன்

ஜனவரி 13, 2024 சனிக்கிழமை

அடுத்த அசத்தல்

ஒன்றிய அரசின் திட்டத்தின்கீழ் "கேலோ இந்தியா" விளையாட்டு போட்டிகள் கடந்த 2018-ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில், 17 வயதிற்கு உட்பட்டவர்கள் மற்றும் 21 வயதிற்கு உட்பட்டவர்கள் என இரண்டு பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டு வந்தன. கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக கடந்த 2020-ம் ஆண்டு இப்போட்டிகள் நடத்தப்படாத நிலையில், கடந்த 2021-ம் ஆண்டில் 18 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான பிரிவில் ஹரியானா மாநிலம், பஞ்சகுலாவிலும், 2022-ம் ஆண்டில் மத்திய பிரதேச மாநிலம் போபால் நகரிலும் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சீரிய நோக்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 2023ம் ஆண்டிற்கான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டியை தமிழகத்தில் நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ளார். அதாவது, 18 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான பிரிவில் 19.01.2024 முதல் 31.01.2024 வரை தமிழ்நாட்டில் இப்போட்டி நடத்தப்பட உள்ளது. 1,500 மீட்டர் ஓட்டம், 2,000 மீட்டர் ஓட்டம், குண்டு எறிதல் (5Kg) என தடகள போட்டிகள் அமர்க்களமாக நடைபெற உள்ளன.

இது ஒருபுறம் இருக்க, பிரேசில் நாட்டில் வருகிற ஜனவரி 14ம்தேதி முதல் ஜன.20ம்தேதி வரை, முதலாவது உலக காது கேளாத இளைஞர் விளையாட்டு போட்டி நடைபெற உள்ளது. இதில், பங்கேற்க தமிழகத்தை சேர்ந்த திருவாரூர் தமிழ்செல்வன், சேலம் சுதர்சன், விழுப்புரம் சுபஸ்ரீ, தேனி பிரியங்கா, காஞ்சிபுரம் வர்ஷினி ஆகிய 5 பேருக்கு ஒன்றிய அரசின் விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தடை விதித்தது. ஆனால், தமிழக அரசு இந்த 5 இளைஞர்களுக்கும் உதவ முன்வந்துள்ளது. அதாவது, இவர்கள் 5 பேர் செலவை தமிழக அரசே ஏற்கும் என தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட துறை மட்டும் பெருமளவில் வளர்வது, வளர்ச்சி அல்ல. ஒட்டு மொத்த துறைகளும் சீராக வளர்ந்தால்தான் தமிழகத்தின் வளர்ச்சி இருக்கும் என்ற தொலைநோக்கு பார்வையுடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். அதற்கு அச்சாரமாக தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சகம் செயல்பட்டு வருகிறது, என்பதற்கு இதுவே சாட்சி. சவால்களை ஏற்பது, தமிழக அரசுக்கு புதிதல்ல. ஏற்கனவே, மாமல்லபுரத்தில் கடந்த 2022ம் ஆண்டு ஜூலை மாதம் சர்வதேச 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை தமிழக அரசு நடத்தியது.

இப்போட்டி மாபெரும் வெற்றிபெற்றது மட்டுமின்றி, உலக அரங்கில் இந்தியாவின் புகழை உச்சத்துக்கு கொண்டு சென்றது. சர்வதேச அளவில் இந்தியா பெயர் வாங்குவதற்கு தமிழ்நாடு அரசு காரணமாக இருந்தது என்பதுதான் உண்மை. அந்த வரிசையில், தற்போது கேலோ இந்தியா விளையாட்டு போட்டியை தமிழக அரசு கையில் எடுத்துள்ளது. இதிலும், தமிழகம் தடம் பதிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அனைத்து விளையாட்டுகளுக்கும் வலுவான கட்டமைப்பை உருவாக்கி, இந்தியாவை ஒரு சிறந்த விளையாட்டு நாடாக நிலை நிறுத்துவதன் மூலம், இந்தியாவில் உள்ள விளையாட்டு கலாசாரத்தை அடிமட்ட அளவில் புதுப்பிக்க, "Khelo India" திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதை வெற்றிப்பாதைக்கு அழைத்துச்செல்ல தமிழக அரசு தோள் கொடுத்துள்ளது. இனி, சர்வதேச விளையாட்டு உலகம் நம்மை திரும்பி பார்க்கும்.

இவ்வாறு 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டும், நம்பிக்கையும் தெரிவித்துள்ளது.

### அவைத்தலைவர் சோ. துரைப்பாண்டியன் தலைமை! கோவை வடக்கு மாவட்டம் -

# கவுண்டம்பாளையம் 35வது வட்டத்தில் பொங்கல் விழா!

## மூத்த முன்னோடி கா. பொன்னரசு முன்னிலை! கழகத்தினர் பங்கேற்பு!

கோவை, ஜன. 14-

கோவை வடக்கு மாவட்டம், கவுண்டம்பாளையம் பகுதி, அறிஞர் அண்ணா நகர் நலச்சங்கத்தின் சார்பிலும், 35 வது வட்டக் கழகத்தின் சார்பாகவும், சமத்துவப் பொங்கல், விழா அண்ணா நகர் நல சங்க கட்டிடத்தின் முன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

எந்த வித, வேறுபாடும் இன்றி அனைவரும் சமம் என்ற ரீதியில், எல்லோருக்கும் எல்லாம் என்ற ரீதியில் நடைபெறும் திராவிட ஆட்சி நடத்தி நல்லாட்சி புரியும் தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சிக்கு பெருமை சேர்த்திடும் விதத்தில் அனைத்து ஜாதி மதத்தை கடந்து அனைவரும் கொண்டாடி மகிழ்ந்தனர்.

35வது வட்ட அவைத் தலைவர் சோ.துரைப்பாண்டியன் தலைமையில் நடைபெற்ற சமத்துவப் பொங்கல் விழாவில் மூத்த முன்னோடியும் முன்னாள் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை அமைப்பாளருமான கா.பொன்னரசு, விக்னேஷ், இன்ஜினியர் சையத் அலுமுதீன், இன்ஜினியர் ராமசாமி, காவல் துணை ஆய்வாளர்கள் (ஓய்வு) மதிவாணன், பரமேஸ்வரன், பால சண்முகம், இ.சர்வீஸ் மோகன்ராஜ், கோவை லேப் சிவகுமார் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



மாநில தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளரும், தொழில் துறை அமைச்சருமான டி.ஆர்.பி. ராஜா முன்னெடுப்பில் மாவட்டக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கு கழக தகவல் தொழில்நுட்ப அணி மூலம் காணொளி வாயிலாக சமூக ஊடகங்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், கழக அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உட்பட அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி யில் முதல்வர் சார்பில் பொங்கல் பரிசுத் தொகுப்பினை முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன் தலைமையில் பேரூராட்சி மன்றத் தலைவர் நஜ்முதீன் வழங்கினார். உடன் துணைத் தலைவர் இபுராகீம் உட்பட பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## கடும் மழையைப் பொருட்படுத்தாமல் பணியாற்றினீர்கள்!

# சென்னையின் அன்னை நீங்கள்தான்!

### சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் - 1,700 முன்களப் பணியாளர்களுக்கு பரிசு வழங்கி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை. ஜன.14-**

**கடும் மழையைப் பொருட்படுத்தாமல் பணியாற்றிய முன்களப் பணியாளர்கள்தான் சென்னையின் அன்னை என்றும் இன்று சென்னை சென்னையாக இருப்பதற்கு காரணம் நீங்கள்தான் என்றும் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் 1.700 முன்களப் பணியாளர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கி உரையாற்றுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டினார்.**

**சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த முன் களப்பணியாளர்கள் 1.700 பேருக்கு தமிழர் திருநாளான பொங்கல் தினத்தையொட்டி சென்னை மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் புத்தாடை, பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. சென்னை ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பரிசுப்பொருட்களை வழங்கி உரையாற்றினார்.**

அப்போது அவர் பேசியதாவது:

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் பெருமை அடைகின்றேன். முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவு நாளை முன்னிட்டு. கடந்தாண்டு ஆகஸ்ட் 7ஆம் தேதி உங்களையெல்லாம் சந்தித்தேன். உங்களுடன் சேர்ந்து அமர்ந்து சாப்பிட்டேன்.

**தாய் வீட்டிற்குத் திரும்புகின்ற உணர்வு!**

இன்றைக்குத் தமிழர் திருநாளை முன்னிட்டு, உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன். நான் எப்பொழுதுமே சொல்வதுதான். தமிழ்நாடு முழுக்க எல்லா மாவட்டத்திற்கும் பயணம் செய்தாலும், இந்த சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி வரும் போது மட்டும் தாய் வீட்டிற்குத் திரும்புகின்ற அந்த உணர்வுதான் ஏற்படுகிறது.

இப்பொழுது உங்களையெல்லாம் பார்க்கும்போது தன் சொந்த வீட்டில் தன் குடும்பத்தாரைப் பார்ப்பது போன்ற உணர்வு தோன்றுகிறது. கடந்த மூன்று நாட்களாகச் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி முழுவதும் பொங்கலை திருநாளை முன்னிட்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகளைத் தெருத் தெருவாகச் சென்று ஒவ்வொரு குடும்பத்துக்கும் அளித்து வருகின்றோம்.

கழக அரசு சார்பிலும் கழகம் சார்பாகவும் நேற்று மட்டும் 12 இடங்களில் கிட்டத்தட்ட 20.000 குடும்பங்களுக்கு, பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கி இருக்கின்றோம். இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு, இன்றைக்கு 15 ஆயிரம் குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க இருக்கின்றோம். தொடர்ந்து இதே மாதிரியான நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டும் வருகின்றோம்.

**'மிக்ஜாம்'புயல் பணிகள்!**

இந்த நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் தயாநிதிமாறன், மாவட்டச் செயலாளர் சகோதரர் சிற்றரசு குறிப்பிட்டதுபோல் சமீபத்தில் `மிக்ஜாம்' புயலின்போது நீங்கள் ஆற்றிய பணிகளுக்கு எங்கள் அனைவரது பாராட்டையும் வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டிசம்பர் 4 மற்றும் 5ஆம் தேதி மிகப்பெரிய மழை வரப்போகிறது என்று சொன்னார்கள். மூன்றாம் தேதி நான் சேலத்தில் இருந்தேன். டிசம்பர் 17ம் தேதி சேலத்தில் இளைஞர் அணி மாநாடு நடப்பதாக இருந்தது. அதன் ஏற்பாடுகளைப் பார்ப்பதற்காக நான் சேலத்தில் இருந்தேன். 3 ஆம் தேதி இரவு மழை ஆரம்பித்து விட்டது.

**நேராக தொகுதிக்குத்தான் வந்தேன்!**

நான் அங்கே எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்து செய்துவிட்டு, அங்கிருந்து கோயம்புத்தூர் சென்று, கோயம்புத்தூரிலிருந்து விமான நிலையத்திற்கு வந்தேன். அப்போதும் நிறைய பேர், ``விமானத்தில் போகாதீர்கள். சென்னையில் இறங்கவே முடியாது” என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு காற்று சுழன்று அடித்துக் கொண்டிருந்தது.

**விமானம் இறங்க முடியாத அளவிற்கு கனமழை!**

இருந்தாலும், `பரவாயில்லை நான் சென்னைக்குப் போக வேண்டும்’ என்று சொல்லி நானும் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களும் இயக்கத்தினரும் இரவு 8 மணி ஃப்ளைட்ஐ பிடித்து கிளம்பி விட்டோம். இங்கே ஒன்பது மணிக்கு இறங்க வேண்டிய ஃப்ளைட் இறங்க முடியாத அளவுக்கு காற்றுடன் கூடிய கன மழை. ஃப்ளைட் ஒரே நிலையில் பறக்காமல் காற்றில் தடுமாறுவதை உணர்ந்து உள்ளே இருப்பவர்கள் சத்தம் போட ஆரம்பித்து விட்டார்கள்.

அந்த அளவுக்கு ஃப்ளைட் ஆட ஆரம்பித்து விட்டது. கிட்டதட்ட பத்தரை மணிக்கு ஃப்ளைட் தரையிரங்கியது. இறங்கிய உடனே நேராக வீட்டுக்குக் கூடப் போகவில்லை. அங்கிருந்து நம்முடைய தொகுதிக்குத்தான் வந்தேன். இரவு 11 மணிக்கு தொடங்கி தொகுதி முழுவதும் சுற்றிவிட்டு அதன் பிறகுதான் வீட்டுக்குச் சென்றேன்.

நள்ளிரவு 2.00 மணி, அப்போது மழை வழக்கத்தைவிட அதிகமாக பெய்யத்தொடங்கியது. மீண்டும் தொகுதிக்கு வந்து நடேசன் சாலைப் பகுதிக்கு வந்தோம். அதற்கு மேல் வண்டி போக முடியாது என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் இறங்கி நடந்துபோகும் போது எங்களுக்கு முன்னால் அங்கு தேங்கியிருந்த நீரை அகற்றும் பணிகளைச் செய்து கொண்டிருந்தது, களப்பணியாளர்களாகிய நீங்கள்தான். பார்த்து வியந்துபோய் விட்டேன்.

‘இப்படி மழை பெய்து கொண்டிருக்கிறது. நம்மாலேயே வர முடியவில்லை. இவர்கள் எப்படி இவ்வளவு தைரியமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்’ என்று வியந்துபோய் அவர்களுக்குத் தேவையானதையெல்லாம் செய்து கொடுத்துவிட்டு வந்தோம்.

**2015ஆம் ஆண்டு பெருவெள்ளம்!**

கடந்த 2015ஆம் ஆண்டு இதேபோல ஒரு பெருவெள்ளம் வந்தது உங்களுக்கெல்லாம் ஞாபகம் இருக்கும். அப்போது சென்னை மாநகரம் கிட்டத்தட்ட பத்து நாட்கள் மூழ்கியிருந்தது. சகஜ நிலை திரும்புவதற்கு 10 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால், இந்தப் புயல், மழைவெள்ளத்தில் மூன்றே நாட்களில் சகஜ நிலைக்கு வந்திருக்கிறது என்றால், அதற்கு முழு காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய முன் களப்பணியாளர்களாகிய நீங்கள்தான்.

வெள்ள நீரை வெளியேற்றியது, உடனடியாக மின் சேவையை வழங்கியது, புயலால் விழுந்த மரங்களை அப்புறப்படுத்தியது, வெள்ளத்தில் அடித்துவரப்பட்ட குப்பைகளை உடனடியாக சுத்தம் செய்தது என்று நீங்கள் மேற்கொண்ட பணிகள் அனைத்தும் தமிழ்நாட்டின் வரலாற்றில் பதிந்திருக்கிறது.

**சிறப்பான நிகழ்ச்சி ஏற்பாடு!**

உங்களுடைய அந்தப் பணிகளுக்காக நாங்கள் அத்தனை பேரும் உங்களுக்கு தலைவணங்குகிறோம். அந்த வெள்ள நேரத்திலும் நானாக இருக்கட்டும், அண்ணன் தயாநிதி மாறன் அவர்களாக இருக்கட்டும் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கட்டும், மாவட்டச் செயலாளராக இருக்கட்டும் தெருவில் இறங்கி மக்களை சந்தித்து மக்களின் குறைகளை கேட்டுக் கொண்டிருந்தோம்.



எந்த தைரியத்தில் போனோம்? நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் அந்தப் பணிகளை செய்து கொடுப்பீர்கள் என்ற அந்த தைரியத்தில்தான். ஆகவே உங்களுக்கு நாங்கள் எவ்வளவு நன்றி சொன்னாலும் அது போதாது.

**பாராட்டுகள் வாழ்த்துகள்!**

இது இன்றைக்கு மதியம் நடந்திருக்கவேண்டிய நிகழ்ச்சி. எனக்குத் தொடர்ந்து பல்வேறு அலுவல்கள் இருந்ததால் நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சிற்றரசு அவர்கள் இன்று மாலை நடத்தி இருக்கிறார். நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக நடத்தியதற்காக அவருக்கு என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வந்தாலும், அதை தினமும் சுத்தப்படுத்தி குளிப்பாட்டுவது இங்கு வந்திருக்கக்கூடிய பெற்றோர்களாகிய நீங்கள்தான்.

முக்கியமாக, நான் தமிழ்நாட்டின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் என்கிட்ட அங்கு இருக்கக்கூடிய நிறைய பேர் சொல்வார்கள். `என்னங்க, சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதிதான் ரொம்ப சுத்தமாக இருக்கிறதாம். எல்லா வேலைகளையும் உடனே செய்து கொடுத்து விடுகிறீர்களாம், மக்கள் என்ன கோரிக்கை வைத்தாலும் நடக்கிறதாம். நாங்களும் உங்கள் தொகுதிக்கு மாறி வந்துவிடலாம் என்று இருக்கிறோம்’ என்று சொல்வார்கள்.

**நகரம் நிம்மதியாக மூச்சு விட நீங்களே காரணம்!**

அதற்கு என்னுடைய பணிகள் மட்டும் காரணம் கிடையாது. இங்கே வந்திருக்கக்கூடிய உங்களுடைய பணிகள்தான் மிகமிக முக்கிய காரணம். இங்கே சுமார் 1,700 தூய்மைப் பணியாளர்கள் வந்திருக்கிறீர்கள். நீங்கள் பெயரளவில் மட்டும் தூய்மைப் பணியாளர்கள் கிடையாது. மனதளவிலும் நீங்கள் மிக மிக தூய்மையானவர்கள் என்பது எனக்குத் தெரியும்.

இந்த நகரம் நிம்மதியாக மூச்சு விடுகிறது என்றால், சுத்தமான காற்றை சுவாசிக்கிறது என்றால், நல்ல தண்ணீரைக் குடிக்கிறோம் என்றால், மின்தடை இல்லாமல் இருக்கிறது என்றால் அதற்கெல்லாம் காரணம் யார் என்றால், இங்கே அமர்ந்திருக்கக்கூடிய முன்களப் பணியாளர்களாகிய நீங்கள் தான்.

ஒய்வு இல்லாமல் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். பகல் இரவு பார்க்காமல், வெயில், மழை என்று பார்க்காமல், பேரிடரோ, பெருந்தொற்றோ என்று முகம் சுளிக்காமல் களத்தில் இறங்கி பணியாற்றுபவர்கள்தான் நீங்கள். எல்லோருக்கும் முன் பணியைத் தொடங்கி, எல்லோருக்கும் பின் பணியை முடிப்பவர்கள் என்ற பெருமையைக் கொண்டவர்கள் நீங்கள்.

> **நீங்கள் ஒருநாள், ஒரு மணி நேரம் வேலை செய்யாமல் போனீர்களென்றால் ஒட்டுமொத்த சென்னையும் முடங்கிவிடும். தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள் தினந்தோறும் இந்த மாநகரத்தை எப்படி தூய்மைப்படுத்தி வருகின்றீர்களோ, அதேபோலத்தான் நம்முடைய தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், சமூகத்தில் பல ஆயிரம் ஆண்டுகளாக மண்டிக் கிடந்த மூடநம்பிக்கை, ஜாதி, மதம், சம்பிரதாயம், சாஸ்திரம் போன்ற குப்பைகளைச் சுத்தப்படுத்தி நம்முடைய வாழ்க்கையை உயர்த்தியுள்ளார்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டையே தன்னுடைய பேச்சாலும், எழுத்தாலும் தூய்மைப்படுத்தியவர் தான் நம்முடைய தலைவர், கலைஞர் அவர்கள்.**

இன்றைக்கு சென்னை, சென்னையாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இங்கே கூடி இருக்கக்கூடிய நீங்கள்தான். உங்களையெல்லாம் `சென்னையின் அன்னை’ என்றுகூட சொல்லலாம்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். வீட்டில் ஒரு குழந்தை காலையில் எழுந்து விளையாட போய் விட்டு, திரும்பி மாலை வரும்போது வியர்வை, அழுக்கு, மண் எல்லாம் ஒட்டிக்கொண்டுதான் வரும். முதலில் தாய்க்கு கொஞ்சம் கோபம் வரும். ஆனால், திட்டாமல் அந்தத் தாய் அந்தக் குழந்தையை அரவணைத்து, அதை குளிக்கச் செய்து தலை துவட்டி சுத்தம் செய்வார்கள். நான் குழந்தை என்று சொன்னது, நம்முடைய சென்னையை. தாய் என்று சொன்னது உங்களை.

சென்னை எவ்வளவு அழுக்காக, வியர்வை யோடு

உங்கள் உழைப்பின் அருமையைப் புரிந்த இயக்கம், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். அதனால்தான் உங்களையெல்லாம் அடிக்கடி சந்தித்து உங்களுடைய சேவைகளை நாங்கள் பாராட்டி கௌரவித்து வருகின்றோம்.

நீங்கள் ஒருநாள், ஒரு மணி நேரம் வேலை செய்யாமல் போனீர்களென்றால் ஒட்டுமொத்த சென்னையும் முடங்கிவிடும். தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள் தினந்தோறும் இந்த மாநகரத்தை எப்படி தூய்மைப்படுத்தி வருகின்றீர்களோ, அதேபோலத்தான் நம்முடைய தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், சமூகத்தில் பல ஆயிரம் ஆண்டுகளாக மண்டிக் கிடந்த மூடநம்பிக்கை, ஜாதி, மதம், சம்பிரதாயம், சாஸ்திரம் போன்ற குப்பை களைச் சுத்தப்படுத்தி நம்முடைய வாழ்க்கையை உயர்த்தியுள்ளார்கள். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டையே தன்னுடைய பேச்சாலும், எழுத்தாலும் தூய்மைப்படுத்தியவர் தான் நம்முடைய தலைவர், கலைஞர் அவர்கள்.

**உங்களுக்காக ஏராளமான திட்டங்கள்!**

தன் வாழ்க்கை முழுக்க அடித்தட்டு மக்களின் பசியைப் போக்கவேண்டும் என்றும் அவர்கள் வாழ்வில் மேலே வர வேண்டும் என்றும் உழைத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர். இன்றைக்கு நேற்று என்று இல்லை, என்றைக்கும் இந்த இயக்கம் உங்களுக்குப் பக்க பலமாக உங்கள் தோளோடு தோளாக நிற்கும். நம்முடைய கலைஞர் காலம் முதல் இப்பொழுது நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்று வரும் இந்த திராவிட மாடல் ஆட்சியிலும் உங்களுக்கான ஏராளமான திட்டங்களை நம்முடைய கழக அரசு கொடுத்துள்ளது.

துப்புரவுப் பணியாளர் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் மூலம் சுமார் 4 ஆயிரம் பேருக்கு நிதி உதவி மற்றும் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள நம்முடைய திராவிட மாடல் அரசு அதற்கான வாய்ப்பை உங்களுக்குக் கொடுத்திருக்கிறது.

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலை மாற்றப்பட்டு, அதற்காக தனி சட்டத்தை இயற்றியது நம்முடைய கழக அரசு. அந்த சட்டத்தின்படி தூய்மைப் பணியாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு, சுயதொழில் தொடங்க விரும்புபவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கழக அரசு அமைந்தவுடன் கொரோனா இரண்டாவது அலை வேகம் எடுத்தது. அப்போது நீங்கள் ஆற்றிய பணிகள் மகத்தானவை. அதனால்தான் உங்களை முன்களப் பணியாளர்கள் என்று நம்முடைய திராவிட மாடல் அரசு அறிவித்தது.

மேலும் ஊதிய உயர்வு, வீடுகள் கட்டிக் கொடுப்பது என உங்களுக்குத் தேவையானவற்றை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து செய்து கொடுத்திருக்கிறார். தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர்கள் 500 பேருக்கு 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஊரகப்பகுதியில் இருக்கக்கூடிய தூய்மைக் காவலர்களின் மாதாந்திர மதிப்பு ஊதியத்தை 3 ஆயிரத்து 600 ரூபாயிலிருந்து 5 ஆயிரமாக உயர்த்தி வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மேலும் ஏற்றமிகு 7 திட்டங்களின் கீழ், சென்னை மாநகரப் பகுதிகளில் கழிவுநீர் அகற்றும் பணிகளை நவீனப்படுத்தி தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களை தொழில் முனைவோர்களாக உருவாக்க நம்முடைய கழக அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. தூய்மைப் பணியாளர்களின் நலனுக்காக இந்திய ஒன்றியத்திலேயே இப்படி பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற அரசு எதுவென்றால், அது நம்முடைய கழக அரசுதான்.

இந்த அரசு, எல்லோருக்குமான அரசாக எல்லாருடைய நிறைகுறைகளை அறிந்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் எப்பொழுதெல்லாம் உங்களுக்குத் தேவை இருக்கிறதோ அப்பொழுதெல்லாம் உங்களுக்குத் துணை நிற்பார்கள்.

நீங்களும் இந்த அரசுக்கு ஆதரவாக முதலமைச்சர் அவர்களுக்கு பக்கபலமாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு வந்திருந்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

சென்னை மேற்கு மாவட்டக் கழக செயலாளர் சிற்றரசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் முன்னிலை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பகுதிக் கழக செயலாளர்கள் மதன்மோகன், ஏ.ஆர்.பி.எம். காமராஜ், சிறுபான்மை நல உரிமைப் பிரிவு செயலாளர் சுபேர்கான், அணிகளின் மாநில நிர்வாகிகள் வி.பி.பொன்னரசு, கௌதம், கென்னடி, இறையன்பன் குத்தூஸ், ஆர்.என்.துரை உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், ஈஸ்வரி வெங்கடேசன் உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், ஜி.வெங்கடேசன் உள்ளிட்ட வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

### தமிழ்நாடு முழுவதும் - 2.14 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு

# ரூ.2376 கோடி மதிப்பில் பொங்கல் பரிசுத் தொகுப்புகள்!

### அமைச்சர் அர.சக்கரபாணி பொங்கல் பரிசுகள் வழங்கி தகவல்!

*திண்டுக்கல், ஜன.14-*

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றது முதல் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் சிறப்பான ஆட்சி செய்து கொண்டிருக்கிறார். தமிழ்நாடு மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை தமிழர்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் வருகின்ற 2024ஆம் ஆண்டு தைப் பொங்கலுக்கு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, பொங்கல் பரிசு தொகுப்பாக, பச்சரிசி 1 கிலோ (மதிப்பு -ரூ. 35.20), சர்க்கரை ஒரு கிலோ (மதிப்பு ரூ. 40.61), கரும்பு ஒன்று (மதிப்பு ரூ. 33.00) என மொத்தம் மதிப்பு ரூ.108.81 மற்றும் ரொக்கம் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. ஆக மொத்தம் ஒரு பரிசு தொகுப்பின் மொத்த மதிப்பு ரூ.1108.81 ஆகும்.

தமிழ்நாடு முழுவதும், 2,14,30,587 குடும்ப அட்டைதாரர்களுக்கு, மொத்தம் ரூ.2,376.22 கோடி மதிப்பிலான பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் 6,79,414 குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.75.33 கோடி மதிப்பிலான பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் 1004 நியாயவிலைக் கடைகளில் 6,46,259 குடும்ப அட்டைதாரர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் 19 நியாயவிலைக் கடைகளில் 22,572 குடும்ப அட்டைதாரர்கள், மகளிர் சுயஉதவிக்குழு 12 நியாய விலைக் கடைகளில் 10,705 குடும்ப அட்டைதாரர்கள் என 1035 நியாய விலைக்கடைகளின் மூலமாக மொத்தம் 6,79,414 அரிசி குடும்ப அட்டை தாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படுகிறது.

இன்றைய தினம் பொருளூர் ஊராட்சி, மரிச்சிலம்பு ஊராட்சியில் பூணம்பட்டி, புளியம்பட்டி ஊராட்சியில் புளியம்பட்டி, தும்பலப்ப ட்டி ஊராட்சியில் தும்பலப்பட்டி, தொப்பம்பட்டி ஊராட்சியில் தொப்பம்பட்டி, கீரனூர் பேரூராட்சியில் கீரனூர், மேல்கரைப்பட்டி ஊராட்சி மேல்கரைப்பட்டி, கோரிக்கடவு ஊராட்சியில் கோரிக்கடவு, அக்கரைப்பட்டி ஊராட்சியில் நரிக்கல்பட்டி, மானூர் ஊராட்சியில் மானூர் தாளையூத்து ஊராட்சி தாளையூத்து, புஷ்பத்தூர் ஊராட்சி புஷ்பத்தூர் ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

பொருளூர் ஊராட்சி, பொருளூரில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ், வெள்ளத்தடுப்பணை, சிமெண்ட் சாலை, வண்ணக்கல், சிறுபாலம் கட்டுதல் ஆகிய பணிகளுக்கு இன்று(12.01.2024) அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**முருங்கை மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது!**

கொள்முதல் செய்யப்படும் நெல்லை பாதுகாப்பாக சேமித்து வைப்பதற்காக 4 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லை சேமிக்கும் வகையில் செமி குடோன்கள் கட்டப்பட்டு வருகின்றன. பணிகள் முடிந்து விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளன. முருங்கை விவசாயிகளை மேம்படுத்தும் வகையில் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் முருங்கை மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவ, மாணவிகளின் விளையாட்டுத் திறனை கண்டறிந்து, ஊக்குவிக்கும் வகையில் சட்டமன்ற தொகுதிகள்தோறும் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு வருகிறது. தொப்பம்பட்டியில் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு மைதானம் அமையவுள்ளது. அதேபோல் கேதையறும்பில் விளையாட்டு மைதானம் அமைக்கப்படவுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றி வருகிறார்கள். கொரோனா காலத்தில் வாழ்வாதாரத்தை இழந்து தவித்த தமிழ்நாடு மக்களைப் பாதுகாக்கும் வகையில் 2.30 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,000 வழங்கப்பட்டது. பெண்கள் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவச பயணம் மேற்கொள்ள வழிவகை ஏற்படுத்தியதை தொடர்ந்து, ஏராளமான பெண்கள் பயனடைந்து வருகின்றனர்.

வீடு இல்லா ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு பல்வேறு திட்டங்களின் கீழ் வீடு வழங்கப்பட்டு வருகிறது. வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டித்தரவும், பழுதடைந்த இலவச வீடுகளை புதுப்பிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் 3.5 இலட்சம் பெண்கள் உயர் கல்வி பயின்று வருகின்றனர். அதேபோல் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 18.00 இலட்சம் குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

**11.85 இலட்சம் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன!**

குடும்பத்தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் விடுபட்ட தகுதியான நபர்கள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி 11.85 இலட்சம் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. அதில் தகுதியுள்ளவர்கள் இத்திட்டத்தில் பயன்பெற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்றத் தொகுதிக்கு காவிரி நீர் ஆதாரத்தைக் கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த சுமார் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் காவிரி குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் வரும் 30 ஆண்டு காலங்களுக்கு இங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது. அந்த வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டு, குடிநீர் விநியோகிக்கப்பட வுள்ளது. 100 நாள் வேலை திட்டத்தில் ரூ.300 சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது ரூ.270 வரை வழங்கப்பட்டு வருகிறது. அது விரைவில் ரூ.300 ஆக உயர்த்தப்படும்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம் உட்பட பல திட்டங்களி செயல்படுத்தப்படுகின்றன. தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி, பொதுமக்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் உறுதுணையுடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.



திருப்புவனம் பேரூராட்சி பகுதி தி.பழையூர் கோட்டை, புதூர், லாடனேந்தல், திருப்பாச்சேத்தி பழையனூர் ஆகிய பகுதி நியாய விலைக் கடைகளில் பொங்கல் பரிசு சர்க்கரை, அரிசி, கரும்பு, ரூபாய் 1000/–ஐ பொது மக்களுக்கு பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துணைப் பதிவாளர் சேதுராமன், வட்டார கள அலுவலர் ஜெயலட்சுமி, வட்டாரக் கள மேற்பார்ளர் குப்புசாமி, கிழக்கு ஒன்றிய செயலாளர் கடம்பசாமி, நகர செயலாளர் நாகூர்கனி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரகமத்துல்லாகான். பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் வேலு பாண்டி,கண்ணன், மாரிதாசன், பாலகிருஷ்ணன், பத்மாவதி முத்துக்குமார், சித்ராஆறுமுகம், ஜனதா செல்வ பிரகாஷ், ஒன்றிய கழக நிர்வாகிகள் ஈஸ்வரன், சுப்பையா, பிச்சமணி, தினகரன், இளங்கோவன், சுப்பிரமணியன், சேகர், மகேந்திரன், மீனாட்சி சுந்தரம், ராஜ்மோகன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் தேவதாஸ், அறிவுக்கரசு, மீனவரணி அண்ணாமலை, மாணவரணி பாண்டிய கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# மாநில அரசுகளின் நிதியில் செயல்படுவதுதான் ஒன்றிய அரசு!

இந்திய திருநாட்டினை இன்றைக்கு ஆளுகிற ஒன்றிய அரசு மக்களின் மனநிலையைப் புரியாமல் ஒட்டு மொத்த இந்தியாவில் இருக்கிற மாநில அரசுகளின் வரி மூலதனத்தில் இருந்து மக்களின் உழைப்பின் மூலம் கொடுக்கப்படுகிறது.

செயல்படுகிற ஒன்றிய அரசுக்கு நேரடியாக எந்த சூழ்நிலையிலும் வெளிநாட்டிலிருந்தும் வருமானம் வருவதில்லை. எந்த விதத்திலும் வருமானம் நேரடியாக வருவதில்லை. எல்லா வருவாயும் ஒன்றிய அரசுக்கு இந்தியா முழுவதும் வாழுகிற மக்கள் தங்களது தொழில் மூலம் சம்பாதிக்கிற பணத்தில் வருமான வரி என்றும் தொழில் வரி என்றும் தொழிலாளர்களுக்கு செலுத்துகிற வரி என்றும் ஓட்டுகிற வாகனங்களுக்கு சாலை வரி என்றும் எல்லா விதத்திலும் ஒன்றிய அரசுக்கு வருகிற வருவாய் மக்களின் உழைப்பால் கிடைக்கிற வருவாய்தான் என்பதை மறந்து விட்டு மாநில அரசுகளுக்கு கொடுக்கிற நிதி என்பது ஒன்றிய அரசு நிதி, ஒன்றிய அரசு நிதி என்கிறார்கள்.

ஒன்றிய அரசுக்கே நிதி கொடுப்பவர்கள் மாநில அரசுகளும் மாநிலங்களில் வாழ்கிற மக்களும் தான்.

அப்படிப்பட்ட நிலையில் இன்றைக்கு ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் மூலம் கிடைக்கும் வரிப்பணத்தில் அதிகமாகவே செலவு செய்வதாகவும், வழங்கி இருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

அதாவது மெட்ரோ ரயில்வே திட்டம் சென்னையில் இருந்து பெங்களூர் வரை, புதிதாக அமைக்கும் எக்ஸ்பிரஸ் ஹைவே சாலைத் திட்டம், பெரம்பூரில் உள்ள ஐ.சி.எப். இந்தியா கோச் ஃபேக்டரி மூலம் தயாரிக்கப்படும் வந்தே பாரத் ரயில் பெட்டிகள் தயாரிக்கும் நிறுவனத்தில் இருந்து நான்கு ரயில்கள் தமிழ்நாட்டிலே விட்டிருக்கிறோம் என்று கூறுகிறார்கள்.

மெத்தப் பணிவோடு ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்; தமிழகத்தில் மக்கள் கடினமாக உழைத்து வருமான வரி மூலம் ஆண்டுக்கு 2014 இல் இருந்து இதுவரை சுமார் ரூ.90 ஆயிரம் கோடியில் இருந்து ரூபாய் ஒரு லட்சம் கோடி வரை ஆண்டுக்கு வருமான வரி என்று செலுத்தியது. இந்த ஒன்பது ஆண்டுகளில் ரூ. 8,20,000 கோடிக்கு மேல் செலுத்தி இருக்கிறார்கள்.

வியாபாரிகள், கடைக்காரர்கள், சிறு, குறு, தொழில்புரிபவர்கள், பெரிய தொழில் நிறுவனங்கள் மூலம், தொழில் துறையில் ஜி.எஸ்.டி. ஒவ்வொரு மாதமும் சராசரியாக ரூ.8,000 ஆயிரம் கோடியில் இருந்து ரூ.10,000 ஆயிரம் கோடி வரை அரசுக்கு செலுத்தி அதில் 50% மாநில அரசுக்கும் 50 %சதவீதம் ஒன்றிய அரசுக்கும் என்ற அடிப்படையில் ஒரு ஆண்டில் சுமார் ஒரு லட்சம் கோடிக்கு மேல் ஜி.எஸ்.டி. இருந்து மட்டும் ஒன்றிய அரசுக்கு வருமானமாக தமிழ்நாட்டில் இருந்து கிடைக்கிறது. அதிலிருந்து ஒன்றிய அரசு அதிக நிதியை கொடுக்க வேண்டுகிறேன்.

அது இல்லாமல் கலால் வரி, சுங்க வரி, சாலை வரி, தொழில் வரி, தொழிற்சாலைகள் பதிவு செய்கின்ற பதிவாளர்கள் அலுவலகத்திற்கு செலுத்துகிற வரி உட்பட ஏராளமான திட்டங்கள் மூலம் ஒன்றிய அரசுக்கு வரியாக கிடைக்கிறது.

ரயில்வே துறையில் தென்னக ரயில்வே மூலம் தமிழ்நாட்டில் இருந்து பார்சல்கள் கையாளுகிற கூட்ஸ் வாகனம் மூலம் மட்டும் பல்லாயிரம் கோடி ரூபாய் வருமானமாக ஒன்றிய அரசின் ரயில்வே துறைக்கு கிடைக்கிறது. பயணிகள் கட்டணமாகவும் பல்லாயிரம் கோடி ரூபாய் ரயில்வே துறைக்கு கிடைக்கிறது.

தமிழக மக்கள் மூலம் கிடைக்கிற வருவாயிலிருந்து ரயில்வே துறை முறையாக தமிழ்நாட்டுக்கு செலவு செய்யவில்லை என்பதை ஒன்றிய நிதி அமைச்சர் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழகத்தில் ஏராளமான ரயில் பாதைகள் மீட்டர் கேஜ் பாதையை பிராட்கேஜ் அகலப்பாதையாக ரயில்வே பாதைகள் அமைக்க வேண்டிய இடங்கள் ஏராளமாக உள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் இருந்து சத்தியமங்கலம் வழியாக மைசூருக்கு ரயில்வே பாதை அமைக்க வேண்டி பல ஆண்டுகளாக கோரிக்கை விடப்பட்டு திட்டங்கள் செயல்படுத்த நிதி ஒதுக்கி ஆய்வுகள் எல்லாம் செய்த பிறகு அது கிடப்பில் இருக்கிறது. அதையும் ஒன்றிய நிதி அமைச்சர் கவனத்தில் கொண்டு தமிழகத்திற்கு, ஒன்றிய அரசுக்கு ரயில்வே துறைக்கு வருகிற வருமானத்தில் ஒரு 75% தொகையை தமிழ்நாட்டுக்கே செலவு செய்யுங்கள் என்று கேட்கிறோம்.

வருமான வரித் துறைக்கு தமிழ்நாட்டில் இருந்து கிடைக்கும் வருவாயில் ஒரு 50 சதவீத தொகையை தமிழ்நாட்டுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசு திருப்பிக் கொடுத்தால் தொழில் புரிபவர்களுக்கு வருமான வரி கட்டுகிறவர்களுக்கு அந்த தொழிற்சாலைகள் இருக்கும் பகுதிகளுக்கு இன்னும் அதிகமான அபிவிருத்தி திட்டங்களை அடிப்படை திட்டங்களை செய்து கொடுப்பதற்கு வசதியாக இருக்கும். அதற்கு ஒன்றிய நிதி அமைச்சர் நிதிகொடுப்பார்களா?

சாலை வரியாக தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படும் கார்கள், லாரிகள், இருசக்கர வாகனங்கள் உட்பட எல்லா வாகனங்களுக்கும் பல்லாயிரம் கோடி ரூபாய் சாலை வரியாகப் பெறப்படும் அந்த தொகையில் 50% தமிழகத்தில் ரோடுகள் பராமரிப்புக்கு மாநில நெடுஞ்சாலைத் துறை சாலைகளை தேசிய நெடுஞ்சாலை துறை சாலைகளை இன்னும் அகலப்படுத்துவதற்கு செப்பனிடுவதற்கு நிதி ஒதுக்குவதற்கு ஒன்றிய நிதி அமைச்சர் முன்வருவாரா?

தமிழ்நாட்டில் விமான நிலையத்தை அபிவிருத்தி செய்து வெளிநாட்டு விமான நிலையத்துக்கு ரூ.1600 கோடி செலவு செய்ததாக ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இந்த விமான நிலையங்கள் மூலம் வருகிற வருவாய் ஒன்றிய அரசுக்கு மாதத்திற்கே பல்லாயிரம் கோடி ரூபாய் என்றால் ஆண்டுக்கு எவ்வளவு வருவாய் விமான நிலையங்கள் மூலம் கிடைக்கிறது என்பதனை ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாக தெரிவிக்க வேண்டும். தமிழகத்திலிருந்து கிடைக்கிற பணத்தில்தான் நீங்கள் தமிழக விமான நிலையத்திற்கு அதில் ஒரு பகுதியைதான் செலவு செய்திருக்கிறீர்கள் என்பதையும் நீங்கள் தயவு செய்து தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டு மக்களின் உழைப்பால் ஒன்றிய அரசுக்கு கொடுக்கிற நிதி என்பது பல்லாயிரம் கோடி ரூபாய் அல்ல பல லட்சம் கோடி ரூபாய்.

தமிழகத்தை பொறுத்தவரை இன்றைக்கு இருக்கிற சூழ்நிலைகள் இந்தியாவிலேயே அதிகமாக ஒன்றிய அரசுக்கு வருவாய் கொடுக்கிற மாநிலங்களில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது.



**கோவை செல்வராஜ்**
கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர்

மக்கள் தொகை அடிப்படையில் உத்தரபிரதேசத்திற்கு, மத்திய பிரதேசத்திற்கு, ராஜஸ்தானுக்கு, குஜராத்துக்கு நீங்கள் அதிக நிதி ஒதுக்குகிறோம் என்று ஒன்றிய அரசு சொல்லுகிறது. தயவு செய்து ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களே மக்கள் தொகை கட்டுப்படுத்த வேண்டும் என்று ஒன்றிய அரசு வேண்டுகோள் விட்ட பொழுது தமிழகத்தில் மக்கள் அரசின் கோரிக்கையை நிறைவேற்ற இன்றைக்கு மக்கள் தொகை கட்டுப்பாட்டோடு சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்குகிறது.

தமிழ்நாட்டுக்கு எல்லா வசதி வாய்ப்புகளும் அதிகமாக கிடைத்துவிட்டது அது கிடைக்காத மாநிலங்களுக்கு நாங்கள் அதிகமாக நிதி உதவி கொடுக்கிறோம் என்று சொல்லுவது நியாயம் அல்ல.

அதிக மக்கள் தொகை இருக்கும் மக்கள் கடினமாக உழைத்து தொழிற்சாலைகளை நிறுவி அதன் மூலம் வருவாயை பெருக்கிக் கொள்ள வேண்டும் அதற்கு பதிலாக அதிக வருவாய் கொடுக்கிற மாநிலங்களுக்கு நிதியை கொடுக்காமல் அந்த நிதியை உழைக்காமல் இருக்கும் மாநிலங்களுக்கு கொடுக்க நினைப்பது எந்த விதத்தில் நியாயம்.

எந்த பாகுபாடும் இல்லாமல் முறையாக பங்கிட்டு நிதியை ஒதுக்க வேண்டும். ஒன்றிய நிதி அமைச்சர்தான் இதற்கு எங்களுக்கு தெளிவாகப் பதில் சொல்ல வேண்டும்.

தமிழக மக்கள் 95% சதவீத பேர் இன்றைக்கு படித்தவர்களாக இருக்கிறார்கள்

ஏதோ தேர்தல் காலம் என்பதால் கடுமையான விவாதங்களை எடுத்து வைக்கும் ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களே தமிழகத்தில் ஆளும் தி.மு.க. அரசு முதலமைச்சர் தளபதி அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து எல்லா பள்ளிக் குழந்தைகளுக்கும் காலை உணவு, மதிய உணவு வழங்கி படிக்க வைப்பது முதல் இடத்தில் தமிழகம் உள்ளது. அதற்கு காரணம் அந்தக் குழந்தைகள் வாக்களிப்பார்கள் என்று அல்ல..

அனைத்து குழந்தைகளையும் காக்க வேண்டும். தமிழகத்தில் இருக்கிற குழந்தைகள் நல்ல சுகாதாரத்தோடு நோயற்ற உடல் நலத்தோடு படிக்க வேண்டும் எதிர்காலத்தில் அவர்கள் பெரிய சக்தியாக வளர வேண்டும், என்பதற்காகத்தான். தமிழகம் வளர்ச்சி பெறுவதற்காக எல்லா திட்டத்தையும் தமிழக மக்களை காக்க வேண்டும் என்பதற்காக திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

2019ல் மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை அறிவித்து நான்கு ஆண்டுகள் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிறது. எய்ம்ஸ் மருத்துவமனைக்கு 12 கோடியே 35 லட்சம் ரூபாய் மட்டும் நிதி ஒதுக்கி ஆய்வு செய்து நிறுத்தி விட்டார்கள் பணிகள் தொடங்க நிதி ஒதுக்கவில்லை.

இதுவரை இந்த மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையோடு சேர்ந்து அடிக்கல் நாட்டிய உத்தர பிரதேசம், கோரக்பூர் ரூ.874 கோடி ஒதுக்கீடு அசாம் போன்ற மாநிலங்களில் எல்லாம் எய்ம்ஸ் மருத்துவமனை மக்கள் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது.

ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் இன்னும் எந்தப் பணியும் நடக்காமல் அப்படியே உள்ளது. என்ன காரணம் என்பதை ஒன்றிய நிதிஅமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும்.

ஒன்றிய அரசு விளையாட்டு துறையில் 2019 லிருந்து 2023 வரை நான்கு ஆண்டுகளில் ஒதுக்கிய தொகை கர்நாடகா ரூ.127 கோடியே 25 லட்சம், குஜராத் ரூ.586 கோடியே 99 லட்சம்

உத்தர பிரதேசம் ரூ.346 கோடி, மணிப்பூர் ரூ.27 - 11கோடி, ஹரியானா ரூ.45 கோடி 74 லட்சம், பஞ்சாப் ரூ.46 கோடி - 20 லட்சம், தமிழ்நாடு ரூ.19 கோடி.

இந்தியாவில் தமிழகத்தை ஒன்றிய அரசு நிதி ஒதுக்குவதில் புறக்கணிப்பதை ஒன்றிய நிதியமைச்சர் இல்லை என்று சொல்லுவாரா? குறைத்து நிதி வழங்கியதை ஏற்றுக்கொள்கிறாரா?

2024 இல் பாராளுமன்ற தேர்தல் நடைபெறுகிற நேரத்தில் ஒன்றிய அரசு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அறிவித்திருக்கிற திட்டங்கள்.

540 ரயில்வே நிலையங்கள் புதுப்பிக்க ரூ.54,000 கோடி ராஜஸ்தான் மத்திய பிரதேசம் மாநிலங்களுக்கு ரூ.80 ஆயிரம் கோடி ரயில்வே விரிவாக்க திட்டத்திற்கு ரூ.32 ஆயிரத்து 500 கோடி, மின்சார பஸ் சேவை பத்தாயிரம் பஸ்கள் வாங்க ரூ.57 ஆயிரத்து 613 கோடி ஒன்றிய அரசு பங்கு இருபதாயிரம் கோடி ரூபாய்.

இந்தத் திட்டங்கள் எப்படி ஐந்து மாத காலத்திற்குள் நிறைவேற்ற முடியும் என்பதனை ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கமாக பதில் அளிக்க வேண்டும்.

ரயில்வே திட்டங்களில் ரயில் நிலையங்கள் பராமரிப்புக்கு ஒதுக்கிய நிதிகள் அகமதாபாத் டெல்லி, மும்பையில் நிலையங்கள் பராமரிக்க பத்தாயிரம் கோடிக்கு மேல் வடக்கு ரயில்வே திட்டத்திற்கு ரூ.13 ஆயிரத்து இருநூறு கோடி. தெற்கு ரயில்வே திட்டத்திற்கு ரூ.59 கோடி இந்த வஞ்சகம் மிக்க நிதி ஒதுக்கீட்டை ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கமாக எங்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

குறிப்பாக பிரதமரின் பயிர் காப்பீட்டு நிதி முன்பு ஒதுக்கப்பட்டது ஒன்றிய அரசு 49 %சதவீதம் மாநில அரசு 49% சதவீதம் விவசாயிகள் 2%சதவீதம் என்று இருந்ததை இப்பொழுது மாற்றியமைத்து மாநில பங்கு 73% சதவீதம் ஒன்றிய அரசு பங்கு 25% பங்கு விவசாயிகள்2%ஒன்றிய அரசு விளக்கம் தந்தால் விவசாயிகள் தெரிந்து கொள்வார்கள்.

சமஸ்கிருதம் மொழி ஆய்வுக்கு 1487 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது செம்மொழி ஆய்வு 74 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பேரிடர் நிதி ஒதுக்கீட்டில் 15வது நிதி குழு, தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியது 64.65% சதவீதம், உத்தர பிரதேசத்திற்கு ஒதுக்கிய நிதி 214.39 %சதவீதம்.

2014 -15 முதல் 2021- 22 வரை நேரடி வரியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 5- 16% சதவீதம் கோடி தமிழ்நாட்டுக்கு திரும்ப கிடைத்தது 2-08% கோடி. உத்தரபிரதேசம் ஒன்றிய அரசுக்கு நேரடி வரியில் கொடுத்தது 2.24 கோடி ஒன்றிய அரசு உத்தர பிரதேசத்திற்கு கொடுத்தது நான்கு மடங்கு அதிகமாக 9-04% கோடி கொடுத்துள்ளது.

2014க்கு முன்பு ஒன்றிய அரசு நியாய விலை கடைகள் மூலம் வழங்கும் உணவு தானியங்களுக்கு அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய், பருப்பு மானியம் கொடுத்து வந்தது இப்பொழுது பிஜேபி அரசு வந்த பிறகு மானியத்தை முழுமையாக நிறுத்திவிட்டார்கள் அதனால் ஆண்டுக்கு 6000 கோடி ரூபாய் மாநில அரசுக்கு செலவு அதிகமாகிறது.

குஜராத் மாநிலத்திற்கு சி.ஏ.ஜி. அறிக்கையில் 2015 இருந்து 16 வரை 2542 கோடி ரூபாயும் 2019 லிருந்து 20 வரை 11,659 கோடி பட்ஜெட் கணக்குக்கு வராமலேயே நேரடியாக ஒன்றிய அரசு நிதி ஒதுக்கிய முறை கேடுஎன்று சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டி உள்ளது.

அதிக சதவீதம் நிதியை உத்திரபிரதேசத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்குவதால்தான் தமிழக நிதி அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு நாம் செலுத்திய ஒரு ரூபாய்க்கு 29 பைசா நமக்குத் திரும்ப கிடைக்கிறது என்றும் உத்தர பிரதேசத்திற்கு ஒரு ரூபாய்க்கு 2.73 பைசா ஈடாக ஒதுக்குகிறது.

எத்தனை மடங்கு அதிகமாக உத்தரபிரதேசத்திற்கு ஒன்றிய அரசு ஒதுக்குகிறது. எதற்காக ஒருதலை பட்சமாக செயல்படுகிறீர்கள் என நாம் கேட்கிறோம்.



சென்னை, அசோக் நகர், டாக்டர் கலைஞர் கருணாநிதி நிர்மலா மகளிர் மேல்நிலைப் பள்ளியின் பொன் விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு நினைவு கல்வெட்டு திறந்து வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, அருள் சகோதரி பேபி லினெட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# காரைக்குடி - செட்டிநாடு கால்நடைப் பண்ணையில் கூடுதலாக பால் உற்பத்தி!

## அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தகவல்!

சிவகங்கை, ஜன.14 -

சிவகங்கை மாவட்டம் செட்டி நாட்டில் 1907.32 ஏக்கரில் அரசு கால்நடை பண்ணை அமைந்துள்ளது இந்த கால்நடை பண்ணையில் மீன் வளம் மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் நேற்று முன்தினம் ஆய்வு நடத்தினார். கால்நடை பண்ணையில் கால்நடைகளான ஆடு வளர்ப்பு மாடு வளர்த்தல் கோழி குஞ்சு வளர்த்தல் மற்றும் ரூ.13 கோடியே 81 லட்சத்தில் நடைபெற்று வரும் நாட்டு கோழி இனப்பெருக்க பண்ணை, மற்றும் தீவன ஆலை கட்டுமானப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

தமிழக முதல்வர் தளபதி அவர்களின் உத்தரவின். பேரில் மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட கால்நடை பண்ணைகளை நேரில் சென்று ஆய்வு செய்து வருகிறேன். என்னுடன் கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பனும் கலந்து கொண்டார். இந்த ஆய்வில் இந்த பண்ணையில் வளரும் ஆடு மாடு கோழிகளை இனப்பெருக்கத்திற்கும் மற்றும் பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டு உள்ளது. இதில் செட்டிநாடு கால்நடை பண்ணை 1907.32 ஏக்கரில் மிகப்பெரிய அளவில் அமைந்துள்ளது. தேவையான கால்நடை தீவனம் மற்றும் 464 மாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றது. 269 ஆடுகள் 781 அகில் கோழி குஞ்சுகள் ஆகியவைகள் உள்ளன. ஆடுகள் பிரிவில் ராமநாதபுரம் வெள்ளாடுகள் அதிகமாக வளர்க்கப்பட்டு வருகின்றது. நாட்டு மாடுகள் பால் உற்பத்தியை மேலும் பெருக்குவதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இங்கு 40 ஏக்கரில் கோழி தீவனப்புல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 150 ஏக்கரில் நாற்று சோளம் உற்பத்தி செய்யப்படு கிறது. மேலும் இங்கு அதிக ஏக்கரில் தீவனம் புல் வளர்த்திட சுயமகளிர் குழுவினருக்கு இடம் தரப்பட உள்ளது. அவ்வாறு வளர்க்கப்படும் தீவனப்புல்லில் 25சதம் கால்நடை பண்ணைக்கும், 75 சதம் வெளியே விற்பனை செய்திடவும் அனுமதி தருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வெளியே விற்பனை செய்யவும் வழி வகைகள் காணப்பட்டுள்ளது.

இதன் மூலம் சுயமகளிர் குழுவினருக்கு வருமானம் கிடைக்கும். இது தவிர பண்ணையில் நாட்டுக்கோழி இனப்பெருக்கம் உருவாக்குவதற்கான கொட்டகை மற்றும் தீவன ஆலை அமைத்தல் மற்றும் குஞ்சு பொரிக்கவும் ஆகிய பணிகள் ரூ. 13 கோடியே 87 லட்சத்தில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றது. வருகிற பிப்ரவரி மாதத்திற்குள் அப்பணிகளை முடிக்குமாறு ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுரை கூறப்பட்டுள்ளது. முதல்வர் தளபதி அவர்கள் பதவியேற்றதும் ஒரே நேரத்தில் 1400 கால்நடை மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். தற்பொழுது தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் 700 பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளார்கள். இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. வழக்கு முடிந்து தீர்ப்பு வந்ததும் கால்நடை மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்படுவார்கள். மீனவர் பிரச்சினையில் மீனவர்கள் சில நேரம் எல்லை தாண்டி செல்லும் சூழ்நிலை ஏற்படுகிறது. அப்பொழுது இலங்கை கடற்படையினர் நமது மீனவர்களை கைது செய்கிறார்கள். இதில் நமது முதல்வர் அவர்கள் வெளியுறவுத் துறைக்கு கடிதம் எழுதி கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்குமாறு கூறும் போது மீனவர் மட்டும் விடுதலை செய்யப்படுகிறார்கள். படகுகள் தரப்படுவதில்லை.

தொடர்ந்து முதல்வர் அவர்கள் மீனவர்களை விடுவிக்கும் போது அவர்களின் படகுகளையும் ஒப்படைக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். பா.ஜ.க.வினர் இதை அரசியலாக பார்க்கிறார்கள். ஆனால் இதை ஒரு அரசியலாக பா.ஜ.க.வினர் அணுகுவதை விட பிரச்சினையின் தன்மையை புரிந்து கொள்ள வேண்டும். ஒன்றிய அரசு மற்றும் வெளியுறவுத் துறை இந்த பிரச்சினையில் முழுமையாக தலையிட்டு மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். சென்ற மாதம் தூத்துக்குடி, நெல்லை உட்பட நான்கு மாவட்டங்களில் பெய்த பெரும் மழையினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். முதல்வர் உத்திரவின் பேரில் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மேற்கொண்ட நிவாரணபணிகளினால் நிலைமை சீரடைந்து வருகிறது. துண்டிக்கப்பட்ட சாலைகள் தற்காலிகமாக போடப்பட்டுள்ளது. பல்வேறுபணிகள் தீவிரமாக நடைபெற்றதால் மக்கள்இயல்பு நிலைமைக்கு திரும்பி வருகிறார்கள். நிரந்தரப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கூறினார்.

பேட்டியின்போது கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் உடன் இருந்தார். முன்னதாக அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன் கேஆர். பெரியகருப்பன் ஆகியோர் செட்டிநாடு கால்நடைத் பண்ணையில் பண்ண செயல்பாடுகள் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார்கள். இந்த ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், கால்நடைத் துறை மருத்துவர் பாஸ்கர் முன்னாள் எம்.எல்.ஏ. தலைமை செயற்குழு உறுப்பினர் டேவிட் செல்வின், வர்த்தக அணி இணைச் செயலாளர் இணை செயலாளர் எஸ். ஆர்.ஏஸ். உ மருசங்கர், மண்டல இணை இயக்குனர் கூடுதல் பொறுப்பு கார்த்திகேயன், செட்டிநாடு கால் பண்ணை துணை இயக்குனர் வே.சு.ராகவன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.மாரியப்பன் கென்னடி, பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஒன்றிய கழக செயலாளர்கள் கே.ஆர். ஆனந்த், குன்னக்குடி சுப்பிரமணியன், கே.பாலசுப்பிரமணியன், ஒன்றிய கழக துணைச் செயலாளர் முத்துக்குமார், பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி ராதிகா, சங்கீதா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.எம். பொற்கோ, வர்த்தக அணி முத்குமாரவண்ணன், அசோக், சேகர், வட்டாட்சியர் தங்க மணி, வட்ட வழங்கல் அலுவலர் நேரு உட்பட கால்நடைத் துறை அதிகாரிகள் கலந்துகொண்டார்கள்.

## சென்னை கோயம்பேட்டில் பொங்கல் சிறப்பு சந்தை!

சென்னை, ஜன. 14 -

பொங்கலையொட்டி சென்னை கோயம்பேட்டில் ஒரே இடத்தில் மஞ்சள், கரும்பு உள்ளிட்ட பொங்கல் பொருட்கள் விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் பொருட்களை வாங்க மக்கள் ஆர்வமுடன் குவிந்தனர். பொங்கல் பண்டிகையை ஒட்டி சென்னை கோயம்பேடு சந்தையில் பொங்கல் சிறப்பு சந்தை அமைக்கப்பட்டுள்ளது. இந்த சந்தைக்கு கரும்பு, மஞ்சள், இஞ்சி உள்ளிட்டவை மாநிலத்தின் பல்வேறு ஊர்களில் இருந்தும் அதிகளவில் வந்துள்ளன.

இதனால் பொங்கல் சிறப்பு சந்தையில் கரும்பு விலை குறைந்துள்ளது. 15 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு நேற்று முன்தினம் ரூ.500 முதல் ரூ.700 வரை விற்பனை செய்யப்பட்ட நிலையில், தற்போது ரூ.300 லிருந்து ரூ.500 வரை விற்பனையாகிறது. அந்த வகையில் கரும்பு கட்டுக்கு ரூ.200 வரை விலை குறைந்ததால் சிறு வியாபாரிகள், மக்கள் ஆர்வமுடன் கரும்புகளை வாங்கிச் சென்றனர். மஞ்சள் விலையில் எவ்வித மாற்றமும் இன்றி ஒரு கொத்து ரூ.80 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்படுகிறது.

கரும்பு, மஞ்சள் விளைச்சல் அதிகரிப்பு காரணமாக கோயம்பேடு சிறப்பு சந்தையில் விலை குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். சேலம், மதுரை, தஞ்சாவூர், கடலூர், புதுச்சேரியில் இருந்து கரும்பும், ஈரோடு, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து மஞ்சளும் 100க்கும் மேற்பட்ட லாரிகளில் கோயம்பேடு சிறப்பு சந்தைக்கு கொண்டு வந்துள்ளன. இதேபோல் காய்கறி விலையும் குறைந்துள்ளதால் மக்கள் ஆர்வமுடன் வாங்கி சென்றனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் சென்னை மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு ஒருங்கிணைந்த சமையலறை மூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டம் ரூபாய் 3.75 கோடி செலவில் செயல்படுத்தப்படும் என 2023–2024 ஆம் ஆண்டு புதிய அறிவிப்பாக வெளியிடப்பட்டது. அதன்படி, சென்னை மாவட்டத்தில் உள்ள 19 கல்லூரி விடுதிகளுக்கும், ஒரு பள்ளி விடுதிக்கும் ஒருங்கிணைந்த சமையலறையின் மூலம் சுகாதாரமான மற்றும் தரமான உணவு வழங்கும் திட்டத்தினை 11.1.2024 அன்று வேப்பேரி, அரசு ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதி வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த சமையற்கூடத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அனைத்து குடும்ப அட்டைகளுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்புகளை தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கடமலைக்குண்டு கிராமத்தில் உள்ள ரேஷன் கடைகளில் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர்கள் சுப்பிரமணியன், தங்கபாண்டியன் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கலைஞர் 100 1924 - 2023
எழும்பூர் தொகுதியில்
வழக்கறிஞர்
இ.பரந்தாமன் பி.ஏ.பி.எல்.,எம்.எல்.ஏ
கழக சட்டத்துறை இணைச் செயலாளர்
எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்
அவர்களின் ஏற்பாட்டில்
தை-1 தமிழ்ப் புத்தாண்டு மற்றும்
சமத்துவப் பொங்கல்
விழா நிகழ்ச்சிகள்
நாள் : 14.01.2024,
காலை 9.00 மணியளவில்
இடம் : கே.பி.பார்க்
கால்பந்தாட்ட விளையாட்டு
மைதானம், புளியந்தோப்பு, சென்னை-12.
கால்பந்தாட்டப் போட்டி
தலைமை
மு.கமலகண்ணன், R.தர்மதுரை
J.சிலம்பரசன், பு.சதிஷ்குமார்
முன்னிலை
சொ.வேலு, க.வினோத், தி.தயாளன்
நாள் : 14.01.2024, காலை 10.00 மணியளவில்
இடம் : அவ்வைபுரம், சேத்துப்பட்டு, சென்னை-30
கேரம் விளையாட்டு போட்டி
தலைமை
ரா.வெற்றிவேல், K.சீனிவாசன்
முன்னிலை
வி.சுதாகர், சே.பாலாஜி
வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன்
நாள் : 14.01.2024, மாலை 3.00 மணியளவில்
இடம் : காட்டூர் நல்லமுத்து தெரு, தட்டாங்குளம், சென்னை-12.
பெண்களுக்கான கோலப் போட்டி
தலைமை
மு.கமலகண்ணன், A.கவிதா
முன்னிலை
சொ.வேலு, க.வினோத், தி.தயாளன்
நாள் : 15.01.2024, காலை 11.00 மணியளவில்
இடம் : தாக்கர் தெரு, புரசைவாக்கம், சென்னை-07.
சமத்துவப் பொங்கல் விழா
தலைமை
M.E.தேவநிதி
முன்னிலை
வி.சுதாகர், சே.பாலாஜி, வி.விஜயகுமார்
மாண்புமிகு
பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் / இந்துசமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
பெருநகர சென்னை வளர்ச்சி குழுமம் தலைவர்
திருமிகு
தயாநிதிமாறன் எம்.பி
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் / மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக, வட்ட கழக முன்னாள் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள், வட்ட செயற்குழு உறுப்பினர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.
அனைவருக்கும் தை-1 தமிழ் புத்தாண்டு மற்றும் சமத்துவப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
அன்புடன் : எழும்பூர் சட்டமன்ற தொகுதி

# கலைஞரும் நானும் 53

**"கலைஞர் வெறும் தலைவர் மட்டுமல்ல. அவர் தமிழ் நிலத்தின் வழிகாட்டி. அவருடன் கொள்கை ரீதியான உறவு கொண்ட குடும்பத்தினர் நாங்கள். எங்கள் குடும்பத்தின் காட்ஃபாதர். அவரது நினைவுகள் அழியாச் சுவடு கொண்டவை" என பகிர்கிறார் இயக்குநர் எஸ்.பி.முத்துராமன்.**

■ **எஸ்.பி.முத்துராமன்,** திரைப்பட இயக்குநர்.



## "முத்துராமன் எங்க வீட்டுப் பிள்ளை என்றார்!"

"நான் கலைத்துறை சார்ந்து மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் தொடர்புடையவன். எனது தந்தையார் காலம் சென்ற காரைக்குடி இராம சுப்பையா கழக முன்னோடி மட்டுமல்ல கலைஞருக்கு உற்ற நண்பருமாவார். சுயமரியாதை இயக்கத்தில் செயல்பட்டு, பின்னர் திராவிடர் கழகம் என பெரியாருடன் பயணித்தவர்கள் என் பெற்றோர். பிறகு பேரறிஞர் அண்ணாவுடன் தி.மு.க கழகத்தில் செயல்பட்டவர். கலைஞருக்கு அப்பா அவ்வளவு நெருக்கம். கல்லக்குடிப் போராட்டத்தில் அப்பாவின் தீரத்தை 'நெஞ்சுக்கு நீதி' நூலில் பதிவு செய்திருப்பார் கலைஞர்.

நான் பள்ளி படித்த காலத்தில்தான் 'பராசக்தி' திரைப்படம் வந்தது. அது அந்தக் காலகட்ட இளைஞர்களிடையே பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒருவகையில் நான் கலைத்துறைக்கு வர வேண்டும் என எண்ணத்தை உருவாக்கியது 'பராசக்தி' திரைப் படம்தான் என உறுதியாகச் சொல்ல முடியும். கலைஞரின் எழுத்துகள் அந்த அளவுக்கு உணர்வூட்டின. சொல்லப் போனால் கலைஞரின் எழுத்துகள், மேடைப்பேச்சுகளால் ஈர்க்கப் பட்டுத்தான் திரைத் துறைக்கு வந்தேன்.



### கல்லக்குடி மேடை

கல்லக்குடி போராட்டத்துக்கு வழி அனுப்பும் பொதுக்கூட்டத்துக்கு அப்பா என்னை அழைத்துச் சென்றிருந்தார். பேரறிஞர் அண்ணா "போய் வா தம்பி" என அன்று பேச்சை முடித்த போது, "போய் வருகிறேன் அண்ணா" என கலைஞர் தொடங்கிய அந்த நேரத்தில் மொத்தக் கூட்டமும் ஆர்ப்பரித்து எழுப்பிய அந்த ஓசை, இப்போதும் கேட்பதுபோல இருக்கும்.

"தாயிடம் சொல்லி விட்டு வந்து விட்டேன், மனைவியிடம் சொல்லிவிட்டு வந்து விட்டேன், அண்ணா போய் வருகிறேன்" என அவரின் உரை என் நினைவை விட்டு அகலாது. கல்லக்குடிப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த என் தந்தையைப் பார்க்க அம்மாவுடன் சென்றிருக்கிறேன். அங்கு அப்பாவுடன் கலைஞர் அவர்களும் வந்து ஆறுதல் சொல்வார்.

### ஆதர்ச கலைஞரின் கையால் விருது

பிற்பாடு நான் சினிமாத்துறைக்கு வந்து, ஏவி.எம். ஸ்டுடியோவில் எடிட்டிங் துறையில் வேலைக்குச் சேர்ந்தேன். கலைஞரை அடிக்கடி பார்க்கும் போதெல்லாம் 'தம்பி எப்படி இருக்கிற? அண்ணன் எப்படி இருக்காங்க?' என அப்பா குறித்து விசாரிக்காமல் இருக்க மாட்டார்.

'பெத்த மனம் பித்து' என்கிற படம் செய்தேன். அந்தப் படத்தின் 100-வது நாள் விழாவுக்கு கலைஞர் தலைமை வகித்து விருது வழங்கினார். எல்லோருக்கும் விருது கொடுத்துவிட்டு எனக்குக் கொடுக்கும் பொழுது ஏவி.மெய்யப்பச் செட்டியார் அவர்கள், 'இந்த விருது வாங்கிய முத்துராமன் எங்க வீட்டுப் பிள்ளை' என்றார்.

பின்னர் கலைஞர் பேசுகையில், 'முத்துராமன் உங்க வீட்டுப் பிள்ளை ஆவதற்கு முன்னாடியே அவர் எங்க வீட்டுப் பிள்ளை' எனக் கூறினார். நான் மிகவும் புளகாங்கிதம் அடைந்தேன். அவருடைய வசனங்களைக் கேட்டுத்தான் திரைத்துறைக்கே வந்தேன். அவரே என்னை 'எங்க வீட்டுப் பிள்ளை' என திரைத்துறை மேடையில் பாராட்டும்போது அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்த வார்த்தைகள் ஊக்கம் அளித்தன.

எனது திரைத்துறைப் பணியைப் பாராட்டி 'ராஜா சாண்டோ விருது' அளிக்கப் பட்டது. அந்த விருதினை கலைஞர் கையால் வாங்கினேன். இதை விடவும் வேறென்ன பெருமை இருக்க முடியும்? யாருடைய வசனங்களால் ஈர்க்கப்பட்டு திரைத்துறைக்கு வந்தேனோ அவருடைய கைகளால் திரைத்துறைக்கு என விருது பெற்றது எனக்குக் கிடைத்த பெரும் பேறு.

### இப்படியும் படம் எடுப்பியா?

'ஒரு மனிதனின் கதை' என்கிற கதையை 'தியாகு' என்கிற பெயரில் படமாக எடுத்தோம். போதை ஒழிப்புக்கு எதிரான அந்தப் படத்தை விநியோகஸ்தர்கள் யாரும் வாங்கவில்லை. ஒரு கட்டத்தில் கலைஞரின் கவனத்துக்குக் கொண்டு சென்று படத்தைப் போட்டுக் காட்டினோம்.

படத்தைப் பார்த்தவர் என்னைப் பார்த்து "முத்துராமா இப்படியான படம் எல்லாம் நீ எடுப்பியா?" எனக் கேட்டார். பின்னர் அந்தப் படத்தை அரசு சார்பில் வாங்கி தமிழ்நாடு முழுவதும் கொண்டு சென்றார். சரியான விஷயத்துக்காக அவர் எப்போதும் துணை நிற்பவராக இருந்தார்.

**என் தம்பி சுப.வீரபாண்டியன் இன்று அடைந்துள்ள வளர்ச்சிக்கு கலைஞர் கொடுத்த ஊக்கம் உற்சாகம்தான் காரணம். நான் மட்டுமல்ல, எங்கள் குடும்பத்தினர் அனைவரும் கலைஞருக்கு நெருக்கமானவர்கள்!**

நடிகர் விஜயகாந்த் அவர்கள் நடிகர்கள் சங்கத் தலைவராக இருந்தபோது கலைஞரின் கலைத்துறை பொன்விழா ஆண்டு கொண்டாடினோம். அப்போது அவருக்கு நான்கரை அடி உயரத்தில் தங்கப் பேனா பரிசளித்தோம். அப்போது நானும் உடன் இருந்தேன். அவர் அப்போது எங்களோடு அகமகிழ்ந்து உரையாடினார்.

கலைஞரிடம் எப்போதும் ஒரு போர்க்குணம் இருக்கும். எந்தப் பிரச்சினை என்றாலும் அதை சுமுகமாகத் தீர்ப்பதில் வல்லவர். அறிஞர் அண்ணா கலைஞரை மனதில் வைத்துத் தான் 'தம்பி உடையான் படைக்கு அஞ்சான்' எனக் கூறினார். ஏவி.எம். நிறுவனத்தில் ஒரு முறை வேலை நிறுத்தம் நடைபெற்றபோது கலைஞர்தான் தலையிட்டு அதை சுமூகமாகத் தீர்த்து வைத்தார்.

### கருத்துப் போர்

கலைஞருக்கும் கண்ணதாசன் அவர்களுக்கும் கருத்து முரண் ஏற்பட்டு, அறிக்கைப் போர் நடந்த பொழுது, நான் 'தென்றல்' பத்திரிகையில்தான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அறிஞர் அண்ணா அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்த போது "நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும், இனி நடக்கப் போவது நல்லவையாக நடக்கட்டும்" என கவிஞர் அறிக்கை விட்டார். இருவருக்கும் சுமூக நிலை ஏற்பட்டதும் நானெல்லாம் மகிழ்ச்சி அடைந்தேன்.

பெரியார், அண்ணா ஆகியோர் நினைத்தவற்றை செயல்படுத்தியவராக கலைஞர் இருந்தார். அதேபோல், அரசியலிலும், கலைத்துறையிலும் அவருக்குப் பின்னால் ஒரு தலைமுறை வளர்ந்தது. தொடர்ந்து பல முறை கலைஞர் அவர்களைச் சந்தித்து இருக்கிறோம். அப்பாவுக்குப் பின்னர் எங்களுக்கு ஒரு 'காட்ஃபாதர்' ஆக இருந்து வழிநடத்தியவர். கலைஞர் இல்லாமல் எங்கள் குடும்ப நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெற்றதில்லை.

என் தம்பி சுப.வீரபாண்டியன் இன்று அடைந்துள்ள வளர்ச்சிக்கு கலைஞர் கொடுத்த ஊக்கம், உற்சாகம்தான் காரணம். நான் மட்டுமல்ல, எங்கள் குடும்பத்தினர் அனைவரும் கலைஞருக்கு நெருக்கமானவர்கள் என்பதில் எங்களுக்கு எப்போதுமே பெருமை".

...பகிர்வார்கள்

## அன்னபூரணி திரௌபதி!

மாமிசம் உண்பது இராமாயணத்தில் மட்டுமல்ல, மகாபாரதத்திலும் வருகிறது என்கிறார் 'The Myth of the Holy Cow' என்கிற நூலை (தமிழிலும் இருக்கிறது) எழுதிய டி.என்.ஜா என்கிற வரலாற்றாசிரியர். அவர் கூறும் விவரங்களில் சில:

இம்சைக்கு எதிராகப் பேசிய தருமன் ருரு எனப்படும் மான்களை வேட்டையாடி தன் பாண்டவ சகோதரர்களுக்கும், திரௌபதி, காட்டில் வாழ்ந்த பிராமணர்களுக்கும் உணவு படைத்தார். கவுரவர்களின் சகோதரி துச்சலையின் கணவன் ஜெயத்ரதனுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும், 50 மான்களின் இறைச்சியை உணவாகக் கொடுத்தாள். மேலும் தருமர் அவர்களுக்குப் பல வகையான மான்கள், முயல், காட்டுப் பன்றி, எருமை என அனைத்து வகையான விலங்குகளின் இறைச்சியைக் கொடுப்பார் என்றும் திரௌபதி கூறினாள்.

விஷம் தடவாத அம்புகளைக் கொண்டு மான்களைக் கொன்ற பாண்டவர்கள் அவற்றின் இறைச்சியை பிராமணர்களுக்குக் கொடுத்த பின் தாமும் உண்டனர். ரந்திதேவன் என்கிற அரசனின் அரண்மனையில் தினமும் 2000 பசுக்கள் கொல்லப்பட்டன. அவற்றின் இறைச்சியும் தானியங்களும் பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

இப்படி இராமாயணத்திலும், மகா பாரதத்திலும், தர்ம சாஸ்திர நூல்களிலும் ஏராளமான விவரங்கள் இருப்பதாக ஜா, தன் நூலில் குறிப்பிடுகிறார்.

-பத்திரிகையாளர்
ஆர்.விஜயசங்கர் ஃபேஸ்புக் பதிவு

## ஃப்ளாஷ்பேக்





## மாநில அளவில் அமைப்பு!



துரை அழகிரி

திருச்சியில் 1982 ஆம் ஆண்டு ஜூலை 31 மற்றும் ஆகஸ்ட் 1 ஆகிய தேதிகளில் தி.மு.க இளைஞர் அணியின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில்தான் கழக இளைஞர் அணிக்கு மாநில அளவில் அமைப்பு உருவானது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த நிகழ்வுக்கு வரவேற்புக் குழுத் தலைவராக நானும், வரவேற்புக் குழுச் செயலாளர்களாக அன்பில் பொய்யாமொழி, திருச்சி சிவா ஆகியோரும் பணியாற்றினோம். கைக்குழந்தையாக இருந்தபோது எனக்கு 'அழகிரி' என்று பெயர் சூட்டியதைக் குறிப்பிட்டு தலைவர் கலைஞர் உரையாற்றினார்.

-துரை அழகிரி, கழக வழக்கறிஞர்,
மணப்பாறை, திருச்சி மாவட்டம்.


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### அண்ணாவின் 'தீ பரவட்டும்!'

**1943-இல் சென்னை சட்டக் கல்லூரியில் கம்ப ராமாயணம் குறித்து அண்ணாவுக்கும், ரா.பி.சேதுப்பிள்ளைக்கும் விவாதம் நடந்தது. முதலில் பேசிய அறிஞர் அண்ணா கம்ப ராமாயணத்தை அலசி ஆராய்ந்து, ஒன்றரை மணி நேரம் உரையாற்றினார். அண்ணாவின் வாதங்களுக்குப் பதில் சொல்ல முடியாமல், வேறு நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டுமெனக் கூறிவிட்டு, 10 நிமிடங்களில் உரையை முடித்து விட்டார் சேதுப்பிள்ளை. அண்ணாவின் அந்த உரைதான் பின்னாளில் 'தீ பரவட்டும்' நூலானது!**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 359




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.